அகத்தியர் அருளிச்செய்த

# அம்மைநோய் மருத்துவம்

(மூலமும்-உரையும்)

31 DEC 1987
MADRAS

உரையாசிரியர்
புலவர் டாக்டர் மூ. சௌரிராசன்
சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்
சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்

பதிப்பு
அன்னை சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்
சென்னை-30.
1976

உரிமை
அன்னை சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம்

விலை ரூ. 2


அச்சகம்
ஏல் அச்சகம
14, செல்லப்ப முதலி தெரு,
சென்னை—600012.

மாரியம்மனை

நினைவூட்டி வாழும்

அன்னை

PUBLIC LIBRARY
31 DEC 1981
MADRAS



In Loving Memory of
Late. Janab S. Mohamed Ismail
S/o. Late Janab Mohamed Sheriff
108, KUMARAN NAGAR,
PERAVALLUR, MADRAS-600 082.

தெய்வத்திரு

# கமலத்தம்மாள்

# உரை சிறப்புப் பாயிரம்

**நேரிசையாசிரியப்பா**

உலகு புகழ்தமிழ் உலகிற் சிறந்த
நலந்திகழ் தஞ்சை நன்னிலம் சார்ந்த
திருப்புக லூரெனும் திருவளர் பதியில்
கருவில் திருவாய்க் கமலத் தம்மாள்
சித்த மருத்துவ சித்தர் எனத்தகும்
முத்து ராமப் பிள்ளை யருளால்
முத்தமிழ் முக்கனி முப்பா லென்ன
இத்தரை போற்ற இனிதே மூவரை
ஈன்றளித் தனரால்; இன்னுயிர் தழைக்க
ஆன்றநற் பணியை அவருங் கொண்டனர்
மூவருள் இளையான் முத்தமிழ் வல்லான்
நாவலன் சௌரி ராஜன் என்போன்;
காந்தம் இரும்பைக் கவரும் தன்மைபோல்
மாந்தரைக் கவரும் மனவலி யுடையன்;
சீர்மிகு சுவாமி சிவானந் தர்தம்
பேர்பெறு நெறியில் பெறவிருப் புற்றோன்;
குளிர்மை தவழும் குற்றா லத்தில்
மிளிரும் மூலிகை மேன்மைக் காட்சியைத்
தெளிய வமைத்துத் திறமையை நாட்டி
நலமுறு பட்டயம் நல்கப் பெற்றனன்
சரபேந் திரர்சித்த மருத்துவச் சுடரெனும்
சிறந்த சித்த மருத்துவ நூலினை
அருந்தமி ழுலகிற் கன்புட னளித்துப்
பெருமை மிகுநம் பேரா சிரியர்
'சித்த மருத்துவ ஆராய்ச்சி யாளர்'ரெனச்
சித்தங் களித்துச் செப்பிடப் பெற்றான்;
வழிவழி சிறக்க வந்தநன் முறையில்
மழலைக் குழந்தை மருத்துவ நிபுணன்
செந்தமிழ் அகத்தியன் சிந்தை களிக்க
முந்துவை சூரி நூலினைத் தந்தான்
அந்த நூலின தருமை யறிந்தே
இந்த மாநிலம் இனிததன் பயனைத்
துய்த்துய வேண்டித் தூய விளக்கம்
பெய்தளித் தின்று பெருமை எய்தினன்;
அம்மையிற் குளிர்ந்ததன் அம்மையின் நினைவாய்
செம்மையிற் செய்து செய்ந்நன்றி போற்றினன்;
இம்மையில் எல்லா இன்பமும் எய்தி
வாழ வழிசெயும் நூலை
அளித்தனன் நன்றே. அவன்புகழ் வாழ்கவே!

புலவர் தில்லை அழகுவேலர்

# அறிமுகம்

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

—வள்ளுவர் வாக்குப்படி இது மருத்துவர் கடமை.

பிணியின் தன்மை யாது? அஃது எவ்வாறு வந்துற்றது? எவ்வாறு பிணியைத் துடைக்கலாம்? என்றெல்லாம் ஆய்ந்து, மருத்துவ நெறிப்படி தம் திறனைப் பயன்படுத்துவார் நல்ல மருத்துவர் என்று கூறுகிறார் குறள் ஆசிரியர்.

அகத்தியர் அருளிச் செய்த அம்மைநோய் மருத்துவம் என்ற செய்யுள் நூலினை, டாக்டர் மு. சௌரிராஜன் ஏடு பெயர்த்து, அச்சேற்றி, மருத்துவரல்லாதாரும் படித்துப் பயன்பெறும் வகையில் எளிய உரையுடன் சிறிய நூல்வடிவில் வெளியிட்டுள்ளார். இஃது அருமையான பணி; குறிப்பாக, ஏழை மக்களுக்கு இந் நூல் தோன்றாத் துணையாக விளங்கும்.

அம்மை நோயில் பலப்பல வகைகள் உண்டு என்பதனையும், அவை மக்கள் குலத்துக்குச் சொல்லொணா இன்னல்கள் விளைவிக்கின்றன என்பதனையும் இந்நூல் வாயிலாக அறிந்து வியப்பும் அதிர்ச்சியும் அடைகிறோம். நோய்களும் நோய்க் கூறுகளும், தோற்றுவாய்களும் அறிந்து, அவற்றுக்கு வருமுன் காக்கும் அணைகளும் இடமுடியும்.

நோய் வந்த பின்பு, அதன் கொடுமை தணிக்க கூறப்பெற்றுள்ள மருத்துவ முறைகள் பெரும்பாலும் பிணியாளரும் அவர்தம் உறவினரும் தம் வீடுகளிலேயே கடைப்பிடிக்கக் கூடியவை; மருந்துகள் கைப்பக்குவமாக இல்லங்களிலேயே ஆக்கக் கூடியவை. இவை, அன்னையர்க்குப் பெரிதும் துணை செய்யக் கூடியவை.

அம்மைநோய் வந்து குணமான பின் தோன்றக்கூடிய பலப்பல துணைப் பிணிகளைத் தடுப்பதற்கும் அரிய பல மருந்துகளும், மாற்றுகளும் கூறியுள்ளார், அகத்தியர்.

அம்மை நோயினால் கண்ணில் பூ விழுவதைத் தடுக்க ஓர் எளிய—அருமையான முறையினை நூல் செப்புகின்றது. 'பூ விழுந்தால் பனைக்குருத்தினை நெருப்பினில் வாட்டிச் சாறு எடுத்து, பூ விழுந்த கண்ணில் பிழிய, பூ மறையும்'.

எத்தனைப் பேருக்கு இது தெரியும்? என் உறவினர் ஒருவருக்கு அம்மை கண்டு, ஒரு கண்ணில் பூ விழுந்து பார்வை போய்விட்டது. நூல் கூறும் மருத்துவமுறை தெரிந்திருந்தால், பார்வை கெடாமல் காத்திருக்கலாம் அல்லவா?

இப்படி நூல் நெடுகிலும் பல அரிய மருத்துவ முறைகள் தெளிவுறக் கூறப்பெற்றுள்ளன.

மேலைய மருத்துவமுறைகளில்கூட, இத்துணைப் பொன் போன்ற சேதிகள் உள்ளனவா என்று கேட்கத் தோன்றுகிறது.

நம் முன்னோரின் 'வரும் பொருள் அறியும் திறன்' சாலச் சிறப்புடையது.

டாக்டர் மு. சௌரிராஜன் அவர்கள் இத்தகு அரிய நூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டுமென விரும்புகின்றேன்; வழங்குவார் என நம்புகிறேன். அவர்தம் முயற்சிகள் போற்றற்குரியன. வெல்க, பிணி நீக்கும் அவர் பணி!

மக்கள் நோயற்ற வாழ்வு வாழ வழிகாட்டுவதே அவருக்குக் குறைவற்ற செல்வமாகும். ஏனெனில், அவர் வந்த பரம்பரை அத்தகையது; பண்பும் அவ்வாறே.

சென்னை
10—3—1976

வ. உ. சி. சுப்பிரமணியம்

# முன்னுரை

அன்னை வாழ்க! ஆதிசக்தி வாழ்கவே!! என்று மனமொன்றிய நிலையில் வாழ்த்தி வழிபட்டு இச்சிறிய தொகுப்பினை மக்கள் நலம் நாடி மக்கள் மன்றத்தில் படைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

என் பூதவுடலைப் போற்றிச் சுமந்து புவிக்கீந்த பெருமாட்டி யாம் என் அன்னையின் நினைவாக இதனை ஆக்கப் பணித்தது அந்த அரிய சக்தி. 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை' என்பது தமிழ்ப் பெரியோர்களின் முடிவு. அன்னைக்கு முதலிடம் தந்து அளப்பரும் பெருமை பெற்று வாழ்ந்த—வாழுகின்ற அறிஞர் பெருமக்களின் நல்வாழ்வு எல்லாரும் எண்ணி எண்ணி ஏற்க வேண்டியதொன்றாகும். நடுத்தரக் குடியில் பிறந்து நடுத்தரக் குடியில் புகுந்த என் அன்னையார் ஏற்ற இன்பங்களை எண்ணின் இன்னல்களே மிகையாகும். அக் குடியிருந்த கோயிலை எண்ணும்தோறும் அகம் நொந்து புண்ணாகும் நிலை பக்கம்; அகம் மகிழ்ந்து மீக்கூறும் நிலை மற்றொரு பக்கம்.

அருமை அன்னையின் திருவுருவை ஆதிபெருஞ் சக்தியாகிய ஸ்ரீ சீதளாதேவி தமது திருவடி நிழலில் அரவணைத்துக்கொள்ள ஆர்வமுற்றாள் போலும். அன்னையார் இவ்வுலக வாழ்விலிருந்து பறித்து எடுத்துக்கொள்ளப்பெற்றார். அன்னை மாரியம்மனின் அகக் கருணை ஏதுவாயினும் அன்றுமுதல் அன்னையார் நினைவாக அம்மை நோய் விளக்கமும்—அந்நோய் தீர்க்கும் முன்னோர் முறை களும் சேர்த்து ஒரு சிறிய தொகுப்பு ஒன்றை அச்சிட்டு வெளியிட வேண்டுமென எண்ணி வந்தேன். அவ்வெண்ணத்தின் விளைவே இந்தச் சிறிய தொகுப்பு நூல்.

இந்நூல் அளவில் சிறியதாயினும் மக்களுக்கு ஆக்கம் பயக்கும் பெருமையை யெண்ணி கப்பலோட்டிய தமிழர் அவர்களின் குமாரர் உயர்திரு வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்கள் அளித் துவிய அணிந்துரைக்கும், சிறப்புப்பாயிரம் அளித்த புலவர் திரு. தில்லை, தா. அழகுவேலர் அவர்களுக்கும், இந்நூல் உரை யாய்வுப் பணியில் எனக்குப் பேருதவி புரிந்த தமிழாசிரியை திருமதி R. சரோஜினி அம்மாள், M.A., B.O.L. அவர்களுக்கும் தலைதாழ்த்தி நன்றி செலுத்துகிறேன்.

அறிஞர்கள், குற்றம் நீக்கிக் குணம்கொண்டு பிழையிருப்பின் அவை களைய ஏற்ற கருத்துகளை எடுத்தியம்ப வேண்டுகிறேன்.

அன்பன்,

புலவர், டாக்டர் மு. சௌரிராசன்,

சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| அதிசாரத்திற்கு மருந்து | ... | 19 |
| அம்மைநோயில் வாந்தி, பேதி கண்டவர்களுக்கு மருந்து | | 14 |
| அம்மை பதினொன்றின் பெயர்கள் | ... | 2 |
| அம்மை வரக்காரணமும்-குறிகளும் | ... | 2 |
| அம்மைநோயால் வந்த கிராந்திக்கு மருந்து | ... | 15 |
| ஆருத புண்ணுக்கு மருந்து | ... | 25 |
| இரத்தக் கடுப்புக்கு மருந்து | ... | 18 |
| உப்புதரி அம்மை | ... | 6 |
| கடுகம்மை | ... | 6 |
| கண்ணுக்கு ஒற்றடம் | ... | 23 |
| கரும்பனிச்சை அம்மை | ... | 7 |
| கரும்பனிச்சையம்மையின் அசாத்திய குணம் | ... | 7 |
| கரும்பனிச்சையின் கேடு | ... | 11 |
| கல்லுதரி அம்மை | ... | 5 |
| கிராந்தலுக்கு மருந்து வேறு | ... | 17 |
| கொள்ளம்மை | ... | 9 |
| சிறுசெறுப்படைப் பற்பம் | ... | 13 |
| சுரத்திற்குக் கியாழம் | ... | 20 |
| சூலைக்கு மருந்து | ... | 24 |
| தவளையம்மை | ... | 11 |
| தொண்டைகம்மலுக்கு மருந்து | ... | 20 |
| தொற்றும் வைசூரி | ... | 2 |
| நீர்க் கொளுவன் அம்மை | ... | 10 |
| பத்தியத்திற்கு ஆகும் பொருள்கள் | ... | 30 |
| பத்தியத்திற்கு ஆகாப் பொருள்கள் | ... | 31 |
| பல சரக்குக் குடிநீர் | ... | 18 |
| பனைமுகரியம்மை | ... | 3 |
| பாசிப்பயறு அம்மை | ... | 8 |
| பாலம்மை | ... | 3 |
| புண்ணுக்குப் பூச்சுமருந்து | ... | 28 |
| பேதி கண்டவர்களுக்கு மருந்து | ... | 17 |
| மலக்கட்டிற்கு எண்ணெய் | ... | 21 |
| மறுமுள்ளு விவரம் | ... | 27 |
| மிளகம்மை | ... | 4 |
| வரகுதரி அம்மை | ... | 5 |
| விச்சிரிப்பு அம்மை | ... | 10 |
| விழியில் குரு வராமலிருக்க மருந்து | ... | 23 |
| வெந்தய அம்மை | ... | 8 |
| வைசூரியின் வகைகள் | ... | 1 |
| வைசூரிகண்ட ஆறுமாதத்திற்குள் நோய் வந்தால் | ... | 27 |
| வைசூரிக்குப் பத்தியம் | ... | 30 |

அகத்தியர் அருளிச்செய்த

# அம்மை நோய் மருத்துவம்

## கணபதி காப்பு

பூரணமாய் நிறைந்துநின்ற சோதி பாதம்
போற்றிசெய்து உமைபதத்தைப் புகழ்ந்தங் கேத்திக்
காரணமாய் நிருவாணி பாதம் போற்றிக்
கருணைபெற்ற கமலமுனி பாதம் போற்றி
ஆரணமாய் வல்லோர்கள் பாதம் போற்றி
அழகாக வைசூரிக் குணம விழ்தம்
வாரணமாய் வரலாறு விரித்துச் சொல்வேன்
வகைபெறவே கணபதியை மகிழ்ந்தங் கேத்தி. (1)

முழுமையாக எங்கும் நிறைந்த திருவருளைப் போற்றியும், உமையம்மையின் திருவடியைப் புகழ்ந்தும், முதற்பொருளாம் பரம்பொருளை வணங்கியும், அருள்பெற்ற கமலமுனியின் திருவடியைப் போற்றியும், மறையுணர் சான்றோர்களின் திருவடிகளைப் போற்றியும், கணங்களின் பதியை மகிழும்படி ஏத்திப் போற்றியும் வைசூரியெனும் அம்மை நோயின் தன்மைகளையும் மறைபொருளான அதன் உண்மைகளையும் விளக்கிச் சொல்லலுற்றேன்.

## வைசூரியின் வகைகள்

ஏத்தியே போற்றிசெய்து பின்பு கேளாய்
இதமான வைசூரி குருநோ யென்று
போற்றியதோர் போகடமாய் அம்மை யென்றும்
புகழான நால்வகையாய்ப் பிறந்த நோய்தான்
சாற்றியதோர் சாத்தியம்ம சாத்தி யங்கள்
தயவாக யாவர்களு மறிந்து நன்றாய்ப்
பார்த்திடுநீ இவற்றினது பேரைக் கேட்கிற்
பரிவாக விருநான்கு மூன்று மாமே. (2)

தோற்றத்தால், வைசூரி, குருநோய், போகடம், அம்மை என்று நான்கு வகையாகவும் பதினொரு பெயர்கள் கொண்டு வழங்கப் படுவதாகவும் உள்ளது இந்நோய். இதில் சாத்தியம் அசாத்தியம் என்ற கூறுகளும் உண்டென்பதைக் காண்பாய்.

## அம்மை வரக்காரணமும் குறிகளும்

ஆமென்ற வைசூரி வருவதேது
அழலான காரணந்தா னறியச் சொல்வோம்
ஓமென்ற உடலதனில் வேக மிஞ்சி
வெக்கையொடு தேகமெல்லாஞ் சூடு கொண்டு
காமென்ற மூளையது கொதிப்பு மீறிக்
கனமான எலும்புகளைத் துளைத்துக் கொண்டு
பாமென்ற பதினேரு நோய்கள் தாமும்
பரிவாக மெய்யதனிற் பிறந்த வாறே. (3)

அம்மை நோயானது உடலில் வேகங்கள் மீறுதலால் உடற் சூடு கூடுதலாகி, உள்ளுறுப்பு அழற்சி ஏற்பட்டு, வெம்மைமிகுந்து மூளைக்கொதிப்பு உண்டாகி, அதனல் உறுதியுள்ள எலும்பைத் துளைத்துத் தோன்றலால் பதினேரு வகை நோய்களாய்த் தோன்றுகின்றன.

## தொற்றும் வைசூரி

வாறுன வைசூரி கண்ட பேரை
வளமாக மற்ருெருவர் கண்ட போதே
தேருத பயஞ்சனித் திருத யத்தில்
திறமில்லாக் கமலமதில் கொதிப்புண் டாக்கிச்
சீரான் வகையுடனே நோயுங் காணும்
சேகரமாய் உடலெங்கும் பற்றிக் கொள்ளும்
மாருமற் பதிஞென்றின் பேரே தென்னில்
வகையாகச் சொல்லுகிறேன் கேளு கேளு. (4)

வரக்கூடாத கொடிய நோயாகிய வைசூரி என்னும் அம்மை நோயுற்றவரை மற்ருெருவர் நேரில் பார்த்துப் பயமுண்டாகி, மனக் கலக்கமும் இருதய கமலத்தில் அதிகப்படியான அளவிற்குக் (சூடு) கொதிப்பும் ஏற்பட்டு உடலில் வைசூரி எனும் அம்மை நோய் உண்டாகிறது. அம்மை நோயில் பதினெரு வகைகள் உண்டென்றும் கூறியுள்ளார். (இதற்கு மேலும் உண்டு.)

## அம்மை பதினென்றின் பெயர்கள்

கேளப்பா பதினென்றின் பேரை நன்ருய்க்
கிருபையொடு பனிமுகரி, பாலம்மை, யென்றும்
வாளப்பா வரகுதரி, கொள்ளம்மை யென்றும்,
வளமான கல்லுதரி, கடுகம்மை கூடத்
தோளப்பா மிளகினுட னுப்புதரி தானுந்
திறமான கரும்பனிச்சை வெந்தயமு மாகும்
பாளப்பா பாசிப்பயற் றம்மை யோடு
பதினென்றின் பேரெனவே பகர்ந்திட் டோமே. (5)

மேற்கூறியபடி அம்மை நோய் பதினொன்றாக வகுத்துள்ளதை நன்கு கேட்டறிக. அவை, 1. பனைமுகரி, 2. பாலம்மை, 3. வரகுதரி, 4. கொள்ளம்மை, 5. கல்லுதரி, 6. கடுகம்மை, 7. மிளகம்மை, 8. உப்புதரி, 9. கரும்பனிச்சை, 10. வெந்தய அம்மை, 11. பாசிப்பயற்றம்மை என்னும் பதினோரு வகையான அம்மை நோய்களின் பெயரை முறையாக உரைத்துள்ளோம்.

குறிப்பு:— அவ்வவ்வம்மையின் நிறம், அளவு, தன்மை, ஆழம், அமைப்பு ஆகியவற்றைக்கண்டு அவை எந்தெந்த பொருள்களைப் போன்று இருக்கின்றனவோ, அந்தந்தப் பொருள்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர் என்பது மேற்படி பாடலால் விளங்கும்.

## பனைமுகரியம்மை

பகருவோம் இவற்றினுடைக் குணத்தைக் கேளு:
  பரிவான பனைமுகரி பரிச்சை தன்னை]
நிகரான காய்ச்சலது மிதமாய்க் காயும்
  நேரான உடல்நடுக்கும் கண்சி வக்கும்
பகராமல் கண்டதுண்டம் வீக்கங் காணும்
  பரிவான பெரும்பாடு காணுங் கண்டாய்
செகமீதி லிதனாலே பித்தெ டுக்குந்
  தேகத்தில் சன்னியது சேருங் காணே. (6)

பனைமுகரி அம்மையின் குணம் யாதெனில், உடலின் வலிமை குன்றி நொந்து மிதமான சுரம் காயும். உடல் நெருப்பாய்க் கடுக்கும்; நடுக்கம், வாய்பிதற்றல், வியர்வை, உடல் வலி, கண் சிவந்து எரிதல், கழுத்து வீங்கிப் பித்தமாகக் கக்கல் செய்தல், பெண்ணுறுல் பெரும்பாடு போன்று இரத்தம் வெளிப்படல், சன்னிவாதக் குறி குணங்கள் ஏற்பட்டு உடல் இளைத்துச் சிறுநீரில் இரத்தம் வெளிப்படல் போன்ற குறி குணங்களைப் பெற்றிருக்கும்

இந்நோயுற்றவர்களின் உடலில் பனை மட்டையின் கருக்கைப் போல இருப்பதால் இதற்குப் 'பனையேறி', பனைமுகரி என்ற பெயர்கள் வழங்கலாயின.

## பாலம்மை

காணப்பா பாலம்மைக் குணத்தைக் கேளு:
  கடுகவே காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
தோணப்பா தலையில்தான் குருவே காணுஞ்
  சொற்பெரிய வுடம்புகடு கடுப்புண் டாகும்
பேணப்பா ஏழாம்நாள் நீரைக் கட்டிப்
  பிலமான ஒன்பதாம்நா ளிறங்கும் கண்டாய்
ஆணப்பா பதினோராம் நாளிற் றானே
  அடைவாக ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யே. (7)

இடைவிடாத கடுங்காய்ச்சல் கண்ட மூன்றாவது நாளில், தலையில் வேர்க்குரு போன்ற குருக்கள் ஏற்பட்டு, உடலில் வலியும் நடுக்கமும் ஏற்பட்டு, நீர் கோத்துக் கொப்புளங்கள் நாளுக்கு நாள் பெரிதாகி, ஏழு நாள்களில் நோயின் வன்மை அதிகமாகி, ஒன்பதாவது நாள் கொப்புளங்கள் வாட்டமடைந்து இறங்க ஆரம்பிக்கும். உடம்பின் வலிமை பத்து நாளில் முழுக்குணம் ஏற்படும். பதினோராம் நாள் தலை முழுகல் சிறந்ததாகும்.

குறிப்பு:- பதினொரு நாள்களில் குணம் ஏற்பட்டாலுங்கூட, மறு நான்கு நாள்கள் கழித்து, 15-ஆம் நாளில் தலை முழுகுவதே சாலச் சிறந்ததாகும் என்பது பழக்கத்தில் கண்ட உண்மை,

ஒன்பதாம் நாள் இறங்கத் தொடங்கினால், பதினோராம் நாள் முதல் தலை முழுக்கு, பதின்மூன்றாம் நாள் இரண்டாம் தலை முழுக்கு, பதினைந்தாம் நாள் மூன்றாம் தலை முழுக்கு என மூன்று நீராட்டல் நிகழ்த்துவது மரபு.

## மிளகம்மை

செய்யப்பா மிளகினது குணத்தைக் கேளு!
சிறப்பாகக் காய்ச்சலது மிதமாய்க் காயும்
மையப்பா உடம்பெல்லாங் கடுப்பெ டுத்து
வளமான இடுப்பதுவும் வணங்கா தப்பா
மெய்யப்பா உடம்பெல்லாம் வீக்கங் காணும்
மெலிவாக மூர்ச்சையது மிகவே காணும்
பொய்யப்பா இல்லையென்று சொன்னோம் பாரு
புகழாக வேழாநாள் கொல்லுந் தானே. (8)

இந்நோயில் அற்பமான காய்ச்சல் தோன்றி, உடம்பு முழுவதும் வலி ஏற்பட்டு, இடுப்பில் மிகுந்த வலி தோன்றி, இடுப்பை வளைக்க முடியாத நிலைமையும் (குனியவும் நிமிரவும் முடியாமல்) ஏற்பட்டு, உடல் முழுதும் வீக்கம் கண்டு, உடல் வன்மை குன்றி, மூர்ச்சை மிகவும் பெருகும். ஏழாம் நாள் கொன்றுவிடும்.

குறிப்பு:— இடுப்புச்சிலந்தியைப் போலக் கைகால் மூட்டுகளிலும் சிலருக்கு வீக்கமும் வலியும் காண்பதுண்டு, இந்நோயின் மூர்ச்சை ஏற்படுமென்றதால், இந்நோய் பெரும்பாலும் மூளையை மிகுதியாகத் தாக்குமென்பது உணரற்பாலது.

"ஏழாம் நாள் கொல்லும்" என்றதால், இது அசாத்திய அம்மை நோயாகக் கூறல் தகும்.

## வரகுதரி அம்மை

தானென்ற வரகுதரிக் குணத்தைக் கேளு :
தயவாகக் காய்ச்சலது நன்றாய்க் காயும்
வானென்ற மூன்றுநாள் குருவே காணும்
வகையாக வாயாலே யுதிரங் காணும்
தேனென்ற வேழாநாள் நீரைக் கட்டிச்
சிறப்பாகப் பதினொன்றி லிறங்குங் கண்டாய்
மானென்ற நீர்த்தாரை ரத்தங் காணும்
மானிடரே யிதனுடைய மகிமை யாமே. (9)

மூன்று நாள்கள் இடைவிடாது காய்ச்சல் மிகுதியாகக் காணும். மூன்றாவது நாளே உடல் முழுமையும் குருக்கள் தோன்றும். வாயில் இரத்தம் கசியும். (ஈறுகள் வீங்கி வலி ஏற்பட்டு இரத்தம் கசியும்) ஏழாவது நாளில் கொப்புளங்கள் நீர் கோத்துப் பெரிதாகப் பூரிக்கும். எட்டாவது நாளிலிருந்து இறக்கம் கொடுத்துப் பதினோராவது நாள் உடல் முழுமையும் இறக்கம் கொடுக்கும். நீர்த்தாரையில் புண் உண்டாகி இரத்தம் கசியும்.

குறிப்பு :— மேற்கூறப்பட்ட அம்மை நோயில் உடல் முழுமையும் நன்கு இறக்கம் கொடுத்த பிறகே தலை முழுக்குச் செய்தல் வேண்டும்.

## கல்லுதரி அம்மை

மகிமையென்ற கல்லுதரிக் குணத்தைக் கேளு :
வளமான காய்ச்சலது நன்றாய்க் காயும்
செகமுணரக் கக்கல்செய்யும் கழிச்சல் காணும்
சீராக மூன்றுநாள் தலையில் காணும்
அகநெகிழச் சங்கங்கனி போலக் காணும்
அழகாக வேழாநாள் நீரைக் கட்டிப்
புகழாகப் பத்தாநா ளிறங்குங் கண்டாய்
புண்ணியனே பதினேழில் ஸ்நானஞ் செய்யே. (10)

நன்றாக விடாக் காய்ச்சல் காய்ந்து, உலகம் அஞ்சக்கூடிய வகையில் கக்கல் ஏற்பட்டு, உடம்பெல்லாம் வலி உண்டாகிக் கழிச்சலாகும். மூன்றாவது நாள் காய்ச்சல் தணிந்து தலையில் அம்மைக் கொப்புளங்கள் தோன்றும்; அது சங்கம் பழத்தைப் போல இருக்கும். கொப்புளங்கள் ஏழாவது நாளில் நீர் கோத்துப் பத்தாவது நாளில் இறக்கம் கொடுக்கும். பதினேழாவது நாளில் தலைமுழுகச் செய்வதே சாலச் சிறந்ததாகும்.

குறிப்பு :— மேற்கூறப்பட்ட அம்மையில் கொப்புளங்களின் பூரிப்புக் கடுமையானுல் சன்னி வாதக் குறிகுணங்களைத் தோற்றுவிக்கும்; ஆகையால், நிதானமாக நன்கு குணம் ஏற்பட்ட பின்பு தலை முழுகல் வேண்டும்.

## உப்புதரி அம்மை

செய்யவே உப்புதரிக் குணத்தைக் கேளு
செயலாகக் காய்ச்சல்கண்ட மூன்ரும் நாளில்
ஐயமாந் தலையதனில் குருவே காணும்
அழகான வுடலெல்லாம் உப்புப் போலாம்
பையவே யைந்தாம்நாள் நீரைக் கட்டிப்
பரிவாக வேழாநா ளிறங்குங் கண்டாய்
நையவே பதிஞென்றில் ஸ்நானஞ் செய்து
நலமாக வவிழ்தமும் நன்ருய்ச் செய்யே. (11)

உப்புதரி அம்மையில் சுரம் ஏற்பட்ட மூன்ருவது நாளில் தலையில் குருக்கள் தோன்றும். சரீரம் முழுமையும் உப்புப் போலத் தோற்றமளித்து (உப்புப்பூத்தது போல) ஐந்தாம் நாளில் கொப்புளம் பெரிதாகி நீர் கோத்து ஏழாவது நாளில் இறக்கங்காணும். பதிஞேராம்நாள் தலைமுழுகச்செய்து தக்க மருந்துகள் கொடுத்தல் நலம். (தலை முழுகிய பிறகு உப்புப் பூத்தது போலப் படல் படலாகத் தோற்றமளித்து மாறிவிடும்.)

குறிப்பு:– உடலானது, உப்புப் பூத்ததுபோலப் படைபடையாகத் தோற்றமளிப்பதால், இவ்வம்மைக்கு உப்புதரி அல்லது உப்புத்திரி அம்மை எனப் பெயர் வழங்கலாயிற்று.

## கடுகம்மை

செய்யப்பா கடுகம்மைக் குணத்தைக் கேளு:
சிறப்பாகக் காய்ச்சல்கண்ட மூன்ரு நாளில்
வையப்பா தலையதனில் கடுகு போலே
வளமாகக் குருவதுவும் வகையாய்க் காணும்
மெய்யப்பா உடம்பெல்லாம் வீக்கம் காணும்
விளங்கிடவே மென்னிகட்டுங் குரலுங் கம்மும்
ஐயப்பா சடுதியிலே கழிச்சல் காணும்
அழகான கடுகம்மை உண்மை தானே. (12)

கடுகம்மையின் குணமாவது கடுமையான காய்ச்சல்ஏற்பட்ட மூன்ருவது நாளில் தலையிலும் உச்சியிலும் கடுகைப் போன்று குருக்கள் தோன்றும்; பிறகு உடல் முழுமையும் ஒன்ருேடொன்று நெருங்கித் தடித்ததுபோலக் காணும்; மேலும், உடல் முழுமையும் தடித்து வீங்கும்; மென்னி கட்டிக் குரல் கம்மும். மயக்கம்,கழிச்சல் அடிக்கடி உண்டாகும். இவையே கடுகம்மையின் குணமாகும்.

குறிப்பு:— மேற்கூறப்பட்ட அம்மை நோயில் மயக்கமும் கழிச்சலும் ஏற்படும் போது சிறுநீர் சுருங்கல், சிறுநீருடன் இரத்தம் கசிதல் போன்ற குறி குணங்களைக் காட்டிப் பதின்மூன்றும் நாளில் அம்மை மறையும். ஆகையால், பதினைந்தாம் நாளில் தலை முழுகுவதே சிறந்ததாகும்.

## கரும்பனிச்சை அம்மை

தானென்ற கரும்பனிச்சைக் குணத்தைக் கேளு:
    தரியாமல் காய்ச்சல்கண்ட நாலாம் நாளில்
கானென்ற தலையதனிற் குருவே காணும்
    கைக்கடங்காக் கடுப்பெடுத்துக் கருகும் மேனி
வானென்ற குருவதுவு முள்ளே வாங்கும்
    வளமாகப் பேதிகண்டு மூர்ச்சை யாகும்
கோனென்ற மலஞ்சிறுநீர் கட்டித் தானாய்க்
    குறிப்பாகப் பதின்மூன்றி லிறங்குந் தானே. (13)

கரும்பனிச்சை அம்மையில் கடுமையான காய்ச்சல் ஏற்பட்ட நாலாவது நாளில், உச்சியில் குருக்கள் தோன்றி, உடல் முழுமையும் தாங்கொணாத வலி ஏற்பட்டு, உடல் கருகிக் குருக்கள் யாவும் உள்வாங்கும். பேதியுடன் மூர்ச்சை உண்டாகிப் பதின்மூன்றும் நாளில் இறக்கம் காணும். பேதி கண்ட சில நாளில் மலசலங் கட்டினால் நோய் கண்ட பதின்மூன்றும் நாள் தானாக இறங்கி வரும்.

குறிப்பு:— இறக்கம் கொடாமல் நோயின் வன்மை மிகுமானால், உடல் விரிந்து புண்களில் புழுக்கள் உண்டாகும்; நினைவு மாறும்; மார்பில் கோழை கட்டி மேல் மூச்சு உண்டாகும். இருபத்தொரு நாள்கள் கழித்து முழுக்குணம் ஏற்பட்ட பிறகு தலைமுழுகச் செய்வது நன்று.

## கரும்பனிச்சை அம்மையின் அசாத்திய குணம்

இறங்குமுன்னே உடம்பெல்லாம் விரிந்து போகும்
    இதமாகப் புழுவதுதா னுண்டாங் கண்டாய்
கறங்குபோல் பிறக்கினையு மில்லை யப்பா
    கனமாக மூச்சதுதான் மேலே காணும்
அறங்குபுகழ் நாளிருபத் தொன்று சென்றால்
    அடைவாகத் தலைமுழுக்கை அன்பாய்ச் செய்வாய்
திறங்கமாக் கடவுள்செய லுண்டாகுமானால்
    திறமாகத் தீருமது திண்ணந் தானே. (14)

இந்நோயில் அம்மைக் கொப்புளங்களின் பூரிப்பு மிகுமானால், உடம்பு வீங்கி விரிந்துபோவதுடன் புண்கள் தோன்றி அதில் புழுக்கள் ஏற்பட்டு நினைவு இழந்து மேல் மூச்சு ஏற்படும். இறையின் அருளால் இருபத்தோராவது நாளில் இறக்கம் கொடுத்துக் குண மானால் தலைமுழுகச் செய்யலாம். இல்லையெனில் தீருவது அரிது.

இந்நோய் ஏற்பட்டவுடன் மருந்து கொடுத்துக் குணப்படுத் துவதே சாலச் சிறந்ததாகும். இல்லையேல்,நோய் பூரிப்பு அடைந்து மிகுமானால் பிழைப்பது அரிது.

இந்நோயுற்றவர் பெண்ணாக இருந்தால், கருப்பம் அழிந்து பெரும்பாலும் மலடாகவே இருப்பாள்; செவிடாகவும் செய்யக் கூடும். மேலும், கடவுளருளால் இருபத்தொரு நாள்கள் சென்றால் என்று கூறியபடியால், இந்நோய் அசாத்தியமானதென்று குறிப் பாகக் கூறுகிறார் நூலாசிரியர். பிழைப்பது பெரும்பாலுமில்லை என்பது பெறப்படும்.

## வெந்தய அம்மை

தானென்ற வெந்தயத்தின் குணத்தைக் கேளு :
தயவாகக் காய்ச்சல்கண்ட மூன்றாம் நாளில்
கானென்ற தலையதனில் குருவே காணும்
கண்டபின்னே யேழாம்நாள் நீரே கட்டி
வேனென்ற வொன்பதிலே யிறங்குங் கண்டாய்
விவரமாய்ப் பதினைந்தில் முழுக்குச் செய்யப்
பானென்ற வுடம்பதுவும் லகுவே யாகும்
பரிவான வெந்தயத்தின் பரிசு தானே (15)

வெந்தய அம்மை நோயில் காய்ச்சல் ஏற்பட்ட மூன்றாவது நாளில், தலையின் உச்சியில் குருக்கள் தோன்றும். ஏழாவது நாள் கொப்புளங்களில் நீர் கட்டி, ஒன்பதாவது நாளில் இறக்கம் காணும். அப்படி ஒன்பதாவது நாளில் இறக்கம் கண்டால்,பதினைந் தாவது நாளில் தலை முழுகச் செய்வது சிறந்ததாகும்.

குறிப்பு:— இந்நோயின் கொப்புளங்கள் பார்வைக்கு வெந்த யத்தைப் போன்று இருப்பதால், இது வெந்தய அம்மை என வழங்கலாயிற்று.

## பாசிப்பயற்று அம்மை

பரிசென்ற பாசிப்பயற் றம்மை தானும்
பரிவாகக் காய்ச்சலிலே பித்தெடுத்துத்
தரிசென்ற மூன்றாநாள் குருவே காணும்
தயவாக வேழாநாள் நீரைக் கட்டித்
துரிசாக வொன்பதிலே யிறங்கும் பாரு
சுகமாகப் பதினைந்தில் முழுக்குச் செய்து
பிரியமுடன் உடலதுதான் பிலக்கும் நன்றாய்ப்
பேரான நீர்மோரும் சோறுங் கொள்ளே. (16)

பாசிப் பயற்றம்மை நோயில், மூன்று நாள்கள் விடாது காய்ச்சல் காய்ந்து அறிவு மயங்கிப் பித்த வாந்தி, பிதற்றல், சீறி விழுதல் போன்ற குறி குணங்களை உண்டாக்கிப் பிறகு குருக்கள் தோன்றும். ஏழாவது நாளில் நீர் கோத்துப் பூரிப்பு அடையும். ஒன்பதாவது நாளில் கொப்புளங்கள் வாடி இறக்கம் கொடுக்கும். பதினைந்து அல்லது பதினேழாம் நாளில், தலை முழுக்குச் செய்து நீர் மோரும் சோறும் கொடுக்க உடல் வலுவடையும்.

குறிப்பு:— இந்நோயில் சிலருக்கு வாத, பித்த, கபத்தொந்த வேறுபாடுகளினால் ஆடல், பாடல், எழுந்து ஓடுதல் போன்ற நிலைமைகளும் உண்டாகும்.

அருஞ்சொல்லுரை :— பித்தெடுத்து — வாந்தியெடுத்து (பித்த மாறுபாடு) தூக்கலாகி என்றும் பொருள் கொள்க.

## கொள்ளம்மை

கொள்ளப்பா கொள்ளென்ற அம்மை தானுங்
குறிப்பாகக் காய்ச்சல்கண்டு பித்தெ டுக்கும்
கள்ளென்ற முக்குற்றங் கூடத் தோன்றும்
கனமான வலிப்பதுவுங் காணுங் கண்டாய்
விள்ளப்பா காய்ச்சல்கண்ட மூன்று நாளில்
விவரமாய்க் குருவதுவுந் தலையிற் காணும்
மெள்ளப்பா விந்தவகை கண்ட போதே
மேலான பதின்மூன்றி லிறங்குந் தானே. (17)

கொள்ளம்மை நோயின் குணமாவது, கடுமையான காய்ச்சல் (சுரம்) ஏற்பட்டுப் பித்தத்தை மிகச்செய்து, முக்குற்ற வேறுபாட்டினால் வாய்பிதற்றல், உடல் நடுக்கல், வாய் குழறல், கக்கல், இசிவு உண்டாகி மூன்றாவது நாளில் கொள்ளைப்போன்ற வடிவத்துடன் தலையின் உச்சியில் குருக்கள் தோன்றி, பதின்மூன்றாம் நாள் தானாகவே இறக்கம் ஏற்பட்டுவிடும். பதினான்கு அல்லது பதினைந்தாம் நாளில் தலை முழுகுவதே சாலச் சிறந்ததாகும்.

தானென்ற பதினொன்றின் பேரைச் சொல்லித்
தப்பாம லவைகளுடைக் குணத்தைச் சொன்னேன்
வேனென்ற விச்சிரிப்பு நீர்க்கொளுவன் றானும்
விவரமாய்த் தவளைகுரு மூன்றின் பேரை
நானென்ற விவர்களுடைக் குணத்தைச் சொல்ல
நாதனுடை பதம்போற்றி நாட்டம் வைத்துத்
தேனென்ற மொழியள் கருமாரி பாதஞ்
சிந்தையுடன் மனத்தெண்ணித் தெரிசித் தேனே.. (18)

பதினொரு வகைப்பட்ட பெயர்களுடைய வைசூரியம்மையின் குணத்தைச் சொன்னேன். மேலும், விச்சிரிப்பு, நீர்கொளுவான், தவளைக்குரு என்ற மூன்று வகைப்பட்ட அம்மைகளின் குணத்தைச் சொல்லி இறைவனுடைய திருப்பாத கமலங்களை நினைந்து, எல்லாரும் விரும்பிப் போற்றித் தொழக் கூடிய கருமாரி தேவியின் பாதங்களை மனமார வாழ்த்தி வணங்குவேன்.

## விச்சிரிப்பு அம்மை

தெரிசித்தேன் விச்சிரிப்பின் குணத்தைச் சொல்வேன்:
திறமாகக் காய்ச்சல்கண்டு சஞ்சி வக்கும்
பரிசித்தே கக்கல்செயும் கழிச்சல் காணும்
பாங்காக மூன்றுநாள் தலையில் காணும்
பெரிசித்தே உடலெல்லாம் உமிபோற் காணும்
பிலமாக வாரியிட்டே மறையுங் கண்டாய்
அரிசித்தே யேழாம்நாள் முழுக்குச் செய்தே
ஆனபின்பு வயிற்றுளைவு மாறுந் தானே. (19)

'விச்சிரிப்பு அம்மை நோயில் கடுமையான காய்ச்சல்காணும்; கண்கள் சிவந்து எரிச்சல் கொடுக்கும்; கக்கல், கழிச்சல் முதலியன ஏற்படும். உடலில் வன்மை குன்றி மூன்றுவது நாளில் தலையின் உச்சியில் குருக்கள் தோன்றும். உமியை வாரிக் கொட்டியது போல உடல் முழுமையும் சிறுசிறு பருக்களாய்த் தோன்றி மறையும் பருக்கள் தோன்றுவதும் மறைவதுமாய் இருந்து ஏழாவது நாளில் உலர்ந்து காணப்படும்; பிறகு தலை முழுகச் செய்தால், வயிற்றினுள் ஏற்பட்ட அம்மை நோயும் நீங்கும். சில சமயம் சிலருக்குத் தலை முழுகச் செய்த பின்பு வயிற்றுளைவு மறையும்

குறிப்பு :— தலை முழுக்கான பின்பு வயிற்றுவலி மாறுமென்றதனால், இந்த அம்மை கண்டபோது வயிற்றுவலி உண்டாம் என்பது அறியத்தக்கது. வயிற்றுளைவு என்று இந்நோயில் காட்டியுள்ளமையால் இது சிறப்பாக வயிற்றின் உள்ளுறுப்புகளைத் தாக்கு மென்றும் அறியக் கிடக்கிறது.

## நீர்கொளுவன் அம்மை

ஆறுமென்ற நீர்கொளுவன் குணத்தைக் கேளு!
அழலாகக் காய்ச்சல்கண்ட மூன்றும் நாளில்
மாறுமென்ற சங்கன்கனி போலக் காணும்
வளமாக வேழாம்நா ளிறங்கிப் போகும்
தாறுமென்ற வொன்பதிலே முழுக்குச் செய்து
தயவாக உடலதனைக் குளிர்ச்சி செய்து
யாறுமென்ற பரமனையும் போற்றி செய்து
பண்பாக ஆயிபதம் போற்றி செய்யே! (20)

நீர்கொளுவன் அம்மை நோயில் இடைவிடாது மூன்று நாள்கள் காய்ச்சல் கண்டு சிவந்த நிறத்துடன குருக்கள்தோன்றும். அவை பழுத்த சங்கம் பழத்தினைப் போன்று காணப்படும். ஏழாவது நாளில் இறக்கம் காணும் ஒன்பதாவது நாளில் தலை முழுகச் செய்யலாம். (சில நூல்களில் பத்தாம் நாள் இறங்கும் எனவும் பிறகு நான்கு தினங்கள் கழிந்த பின்பு தலை முழுகச் செய்யலாம் எனவும் கூறப்பட்டுள்ளன.)

உடலுக்குக் குளிர்ச்சி ஏற்படக் கூடிய உணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு :— அம்மைக் கொப்புளங்கள், கல்லுதரி அம்மைக் குருவைப்போல,' சங்கம் பழத்தைப் போலவிருப்பினும் அதற்கும் இதற்கும் தொடக்கத்தில் சில மாறுதல் உண்டு. அஃதாவது, கல்லுதரி காணும் முன், சுரத்துடன் வாந்தியும் வயிற்றுப்போக்கும் காணும்; இந்த அம்மையில் சுரம் மட்டுந்தான் காணும். வாந்தியும் வயிற்றுப்போக்கும் இராவென்பதையறிக.

## தவளையம்மை

போற்றியே தவளையென்ற குருதா னப்பா
புகழாகக் காய்ச்சல்கண்டால் நடக்கொட் டாது
போற்றியே சூலையைப்போல் வலியே காணும்
போசனஞ் செல்லாது தவிரப் பண்ணும்
சாத்திகமா யொன்பானு ளான பின்பு
தருகாம லிறங்குமது தப்பா தப்பா
ஆத்தியதோர் பதினொன்றில் முழுக்குச் செய்து
அழகான குருபதத்தை யறிந்தங் கேத்தே. (21)

தவளை அம்மை நோயில் மிகுந்த காய்ச்சல் உண்டாகி உடல் வன்மை குன்றி நடக்க முடியாமல் சூலை நோயைப்போல இரு பக்கமும் குத்தல் வலியோடு மூட்டுகளை நீட்டவும் மடக்கவும் முடியாமல் முடக்கி, உணவு செல்ல முடியாமை ஆகியவற்றை உண்டாக்கும். மூன்றாவது நாள் வேர்க்குருக்கள் தோன்றும். ஒன்பது நாள்கள் வரையில் இந்நோய் அசாத்தியமாக இருக்கும். அதன் பிறகு இறங்கும், பதினோராவது நாளில் தலை முழுகச் செய்வதே சாலச் சிறந்ததாகும்.

## கரும்பனிச்சையின் கேடு

அறிந்தபின் னிவர்களுடைக் குணந்தா னப்பா
அந்தந்த உடம்பதனுக் கடுத்த வாறுந்
தெரிந்ததொரு குணங்குறிகள் தோன்று மப்பா
திறமான கரும்பனிச்சை விந்தைக் கொல்லும்
பறிந்ததொரு கர்ப்பத்தை யழியப் பண்ணும்
பண்பாக அவர்களுக்குப் பிள்ளை யில்லை
முறிந்ததொடே இவர்களுடைக் குணமுஞ் சொன்னேன்
முறைமையுடன் மருந்துவகை சொல்லக் கேளே. (22)

மேற்கூறிய நோய்களின் குணங்கள் உடலின் தன்மையைப் பொறுத்துக் குறிகள் தோன்றும். கரும்பனிச்சை அம்மை நோயுற்றவர்களுக்கு விந்து உற்பத்தியைக் கொன்றுவிடும்; கருப்பத்தை அழித்துவிடும், பெரும்பாலும் இந்நோயுற்றவர்களுக்குக் குழந்தை இல்லை. (மலடாகவேயிருப்பார்கள் எனக் கூறியுள்ளார்.)

நோய்களின் வகைகளையும் அவற்றின் குணங்களையும் முறையாகக் கூறினேன். இனி இந்நோய்களுக்கேற்ற வண்ணம் முறைமையுடன் அதனைப் போக்கக் கூடிய மருந்து வகைகளைக் கூறுகின்றேன் அறிந்துகொள்வாயாக.

கேளடா ஆள்காட்டிக் குருவி முட்டை
கிருபையுடன் பார்த்தெடுத்துக் கொண்டு வந்து
ஆளடா சட்டியிலே உடைத்தே ஊற்றி
அழகான புழுங்கலரிசி சம்பா வப்பா
வாளடா முட்டைகரு நனையு மட்டும்
வளமான அரிசியதை மிதமாய்ப் போட்டுத்
தாளடா வடுப்பேற்றிப் பதமே பார்த்துத்
தவிராமல் கருகாமல் பொரித்து வாங்கே. (23)

ஆள்காட்டிக் குருவியின் முட்டையைக் கொண்டு வந்து ஒரு புதுச்சட்டியில் முட்டையை உடைத்து வார்த்துப் புழுங்கலரிசியை முட்டைக்கருவில் முழுகும் அளவிற்குக் கொட்டி அடுப்பில் வைத்துச் சிறு தீயிட்டு நன்கு வறுத்து, அதாவது முட்டைக்கருவும் அரிசியும்கருகாத அளவிற்குப் பொரித்தெடுத்து, பத்திரப் படுத்துக.

குறிப்பு :— மேற்கூறப்பட்ட அரிசியைக் குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ அரைத்துத் தூள் செய்து வடிகட்டியும் வைத்துக் கொள்ளலாம்.

வாங்கியே செப்பதனி லடைத்துக் கொண்டு
வரிசையாய்க் காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
தாங்கியே யிடக்கையி லரிசி கொட்டித்
தயவாக வலக்கையால் பிடியே யள்ளி
ஏங்கியே திரியாம லுள்ளே கொள்ளே
இதமாக வரிசிதொகை யான மட்டும்
பாங்கியே வைசூரி அதிகம் வாராப்
பரிவான தேகத்துக் கழிவே யில்லை. (24)

மேற்கூறப்பட்ட ஆள்காட்டியின் முட்டையில் பொரித்தெடுத்த அரிசித்தூளைப் புட்டியிலடைத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு அம்மை வருவதற்கு முன் சுரம் ஏற்பட்டவுடன் இரண்டு கைப்பிடியளவு உட்கொள்ளச் செய்தால் மேற்படி அம்மை நோயை வாராமல் தடுத்து நிறுத்திவிடும்; உடலுக்கும் அழிவில்லை.

இல்லையென்று வெகுநேரங் கொண்டால் போதும்
இதமாக மருந்துவகை வேறே சொல்வேன்
வல்லமையா யிம்முறையைச் செய்த பேர்க்கு
வைசூரி அதிகமுமே வாரா தப்பா
பல்லவமா யுலகிலுள்ளோர் பிழைக்க வென்று
பரிவாகப் பெரியோர்கள் செய்த மார்க்கம்
நல்லதென்று வுலகத்தோர் செய்தால் தானே
நமனுமே வாராது நவிலு வோமே (25)

மேற்கூறப்பட்டபடி மருந்தை உட்கொண்டவருக்கு அம்மை நோய் பெரும்பாலும் வாராது, மேலும், உலகிலுள்ளவர்கள் பிழைப்பதற்காகப் பெரியோர்கள் செய்தபடி நல்லதென்று உலகிலுள்ளோர் செய்வார்களேயானல், எமன் வாராவண்ணம் தடுத்து நிறுத்தலாம்.

## சிறு செருப்படைப்பற்பம்

நவிலுவோ மிவர்களுக்கு மருந்து கேளு:
நவமாகக் காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
புவிதனிலே யழகான பாத ரட்சை
புகழாகச் சுட்டதனைப் பற்ப மாக்கிப்
பவிலாக வெருகடிதான் வெந்நீர் தன்னில்
பாகமாய்க் கொண்டுவிடு மூன்று நேரம்
தவிராமல் செய்தபின்பு சொல்லக் கேளு
சாதகமாய்ப் பின்மருந்து மொழியக் கேளே. (26)

காய்ச்சல் ஏற்பட்டவுடனே பாதரட்சைச் செடியைச் சமூலத்துடன் பற்பமாகச் செய்து, பூனையின் காலடி அளவு ஒரு வேளைக்கு எடுத்து வெந்நீருடன் நாளொன்றுக்கு மூன்று வேளை உட்கொள்ள வேண்டும். இவ்வாறு தவருமல் உட்கொண்டு வரக் குணமாகும். (பாதரட்சை = சிறு செருப்படை)

குறிபபு:— மேற்கூறப்பட்ட சிறு செருப்படைச் செடியைச் சமூலத்துடன் கொண்டு வந்து கழுவி நாவறப்பட்டைக் குடிநீர் விட்டு நன்கு நெகிழ அரைத்து, வில்லைகளாகத்தட்டி, வெயிலில் உலர்த்தி, ஓட்டிலிட்டு ஓடு மூடிச்சீலைசெய்து, 10 எருவில் புடமிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும்.

மொழிந்ததொரு மருந்ததுவும் பாகத் தோடே
முறைமையாய்ச் செய்துகொண்டால் பற்பம் நன்ருய்
அழிந்ததொரு வைசூரி குணமே யாகும்
அழகான மருந்ததனை யன்பாய்க் கொள்ளு
கழிந்ததொரு கர்மங்கள் தீர்ந்த பின்பு
கனவுபோல் நோயதுவும் நன்ருய்த் தீரும்
தெளிந்ததொரு வாந்திபண்ணிப் பேதி காணில்
திறமாக நஞ்சுநிலை முறித்தான் வேரே (27)

மேற்கூறப்பட்ட மருந்தை முறைப்படி செய்து முடித்து, குரு பற்பமாகிய சிறு செருப்படைப் பற்பத்தை முறைப்படி உட்கொண்டு வந்தால் அழிவைத் தரும் அம்மை நோய்கள் அனைத்தும் குணமாகும். மேலும், இந்நோயில் வாந்தி ஏற்பட்டு, பேதியும் கண்டால், நஞ்சுமுரித்தான் பாலை வேரினால் குணமாகும்.

## அம்மை நோயில் வாந்தி, பேதி கண்டவர்க்கு மருந்து

வேராகக் கொண்டு வந்து விதமுடன் நரம்பு போக்கிச்
சீராக வெந்நீர் விட்டுத் திறமுடன ரைத்துக் கொண்டு
வாராதவை சூரிக்காய்ச்சல் வகையுடன் வந்த போது
நேராகப் புன்னைக்கா யளவு நீகொள்ளு வெந்நீ ரோடு. (28)

கொள்ளுவாய் கால மேதான் குணமுடன் வாந்தி பேதி
மெள்ளவே காணுங் கண்டாய் விவரமாய் மத்தி யானம்
தெள்ளவே கஞ்சி காய்ச்சித் திறமுடன் கொண்ட பின்பு
அள்ளவே மருந்து தானு மடைவுடன் சொல்லக் கேளே (29)

மேற்கூறப்பட்ட நஞ்சுமுரித்தான் பாலை வேரைக் கொண்டுவந்து, அதிலுள்ள நரம்பைப்போக்கி, காலைத்தூயதாக்கி, குழியம்மியிலிட்டு வெந்நீர்விட்டு நன்கு அரைத்துப் புன்னைக்கா யளவு வெந்நீரில் உட்கொண்டால், வைசூரி நோயினால் ஏற்படும் காய்ச்சல் (சுரம்) குணமாகும்.

மேற்கூறப்பட்ட மருந்தை விடிகாலையில் உட்கொண்டால் வாந்தி, பேதி இரண்டும் தோன்றும், நடுப்பகலில் கஞ்சி காய்ச்சி உட்கொள்ள வேண்டும். சுடுகஞ்சி உட்கொண்டவுடன் வாந்தி, பேதி இரண்டும் நின்று விடும்.

சொல்லக்கேள் மறுநாள் தன்னில் துவக்கமாய்க் கால மேதான்
புல்லக்கேள் புவியண் டத்தார் புகழ்கோழி யவரை கூட
மெல்லப்பா ருள்ளி சேர்த்து விவரமாய் வைத்துக் கொண்டு
வல்லநீ ராகாரத்தில் வடிவுடன் பிசைந்து வாங்கே. (30)

மறு நாட்காலையில் உலகத்தார் விரும்பக்கூடிய கோழி யவரை விதையுடன் ஈருள்ளி சேர்த்து அதை நீராகாரத்தில் அரைத்துக் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

வாங்கியே படிகா லாக வகைபடக் குடிக்க நன்றும்
ஏங்கியே திரிய வேண்டா இம்முறை மூன்று நேரம்
பாங்குடன் சாப்பிட் டேதான் பரிவுடன் சென்ற பின்பு
தாங்கியே மருந்து தானுந் தயவுட னின்னங் கேளே. (31)

மேற்கூறியபடி நீராகாரத்தில் கரைத்து நன்ருய்த் தெளிந்த பின் குடித்துவிட்டு, அமைதியாகப்படுத்துக்கொள்ள வேண்டும். வெளியில் எங்கும் திரியக்கூடாது. இம்முறைப்படி மூன்று வேளை ஒரு நாளைக்குச் சாப்பிட வேண்டும். மேலும் மருந்தைக் கூறுகின்றேன், கேட்பாயாக!

*கேளப்பா பின்பு நீதான் கிளர்பிரா யிலையுங் கூட*
*நாளப்பா மூக்கி ரட்டை நலமுள்ள வேருங் கூட்டித்*
*தாளப்பா தவசி யான முருங்கைதான் சமூலஞ் சேர்த்தே*
*ஆளப்பா நீரா காரத் தடைவுட னிறுத்து வாங்கே.* **(32)**

கிளர் பிராயிலையும், மூக்கிரட்டை வேரும், தவசி முருங்கையின் சமூலமும் சேர்த்து நன்கு நெகிழ அரைத்து, நெல்லிக்காயளவு எடுத்து ½ படி நீராகாரத்துடன் சேர்த்துக் கலக்கி வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

*வாங்கியே படிகா லாக வளருஞ்சீ ரகமுஞ் சேர்த்துத்*
*தாங்கியீ ருள்ளி கூட்டித் தண்மையாய்க் குடிக்க நன்ருய்*
*நீங்கியே மூன்று நேரம் நேர்மையாய்க் கொண்ட பின்பு*
*தாங்கியே மருந்து தானுந் தயவுட னின்னங் கேளே,* **(33)**

நீராகாரத்துடன் சீரகமும். வெங்காயமும் சேர்த்து வேளை ஒன்றுக்குக் காற்படி நீர் உட்கொள்ள வேண்டும், மேற்கொண்டும் மருந்துகள் சொல்லுகிறேன், கேட்பாயாக.

## அம்மை நோயால் வந்த கிராந்திக்கு மருந்து

*தயவுவை சூரி தானுந் தாக்கியுட் கிராந்தி நின்ருல்*
*நலமுட னிளநீர் தன்னை நலம்பெறச் சீவிப் போட்டுத்*
*திடமுடன் வெந்நீர் தன்னில் செயமுட னவித்து வாங்கிப்*
*பயமுடன் கண்தி றந்து பரிவுட னூற்றிக் கொள்ளே.* **(34)**

வைசூரி நோயால் பிறந்த கிராந்தி நோய்க்கு மருந்து கேட்பாயாக! வைசூரி நோய் ஏற்பட்டு உடலில் கிராந்தி நோய் ஏற்பட்டிருக்கும் நோயாளிகள் இளநீர் வெட்டிச்சீவி வெந்நீரில் போட்டு அவித்து எடுத்துப்பிறகு கண் திறந்து உட்கொள்ள வேண்டும்.

*கொள்ளவே யிளநீர்க் குள்ளே கொடுத்திட மருந்து கேளாய்*
*நள்ளவே தேற்ருன் வித்தும் நவில்முத்தக் காசுங் கூட்டித்*
*தெள்ளுசீ ரகந்தான் சேர்த்துத் திறமதா யரைத்துக் கொண்டு*
*கொள்ளவை சூரி தானுங் குணமுடன் கிராந்தல் தீரும்* **(35)**

மேற்கூறப்பட்டுள்ள இளநீருடன் தேற்றான் வித்து, கோரைக்கிழங்கு, சீரகம் ஆகிய இம்மூன்றையும் அரைத்துக் கலக்கி உட்கொள்ள வைசூரி நோயின்போது உண்டாகும் உடல் எரிச்சல் குணமாகும்.

குறிப்பு:— தேற்றான் வித்து, கோரைக்கிழங்கு, சீரகம் இம் மூன்றையும் சமனெடை எடுத்து உரலிலிட்டு இடித்துச் சூரணித்து வடிகட்டி வைத்துக்கொள்க. இதில் இரண்டு அல்லது மூன்று சிட்டிகை எடுத்துத் தயிர், மோர், இளநீர் ஆகியவைகளுள் ஏதாவதொன்றில் கலந்து உட்கொள்ள வேண்டும்.

வள்ளலே யிதுவுஞ் செய்து வளர்கிடாரிச் சாணிப் பாலில்
நள்ளவே பூநா கந்தா னவின்றதோர் வராக னைத்தான்
தெள்ளுசீ ரகமுஞ் சேர்த்துத் திறமதா யரைத்துக் கொண்டு
விள்ளவே யுள்ளே கொள்ள வெக்கையுட் காந்தல் தீரும். (36)

ஐந்து விராகன் பூ நாகத்தை (நாக்குப்பூச்சியை) மோரிலிட்டு கழுவித் தூயதாக்கி, ஈனுத கிடாரியின் எருவில் கரைத்து வடி கட்டித் தெளிவித்து அதில் பூ நாகத்தைப் போட்டு ஊற வைத்து, அதன் அளவிற்குச் சீரகமும் சேர்த்து ஊற வைத்து எடுத்து நன்கு நெகிழ அரைத்து உட்கொள்ள வைசூரியினால் ஏற்பட்ட உட்காங்கை குணமாகும்.

குறிப்பு:— பூ நாகச் செந்தூரத்தை அரிசியெடை எடுத்துத் தேனில்உட்கொண்டு சீரகக் குடிநீர் பருகல் சாலச் சிறந்ததாம்.

தீரவே கற்பக் கல்லைத் திறமதாய்ப் பலங்கால் வாங்கி
ஆரவே யுடைத்துக் கொண்டு வழங்குமான் கொம்புஞ் சேர்த்து
ஊரவே காண்டா மிருக முற்றதோர் மூன்று மொன்றாய்ச்
சாரவே யரைத்துக் கொண்டு சாப்பிடக் கிராந்தல்
[போமே. (37)

சுக்கான் கல் 10 கிராம்; மான் கொம்பு 10 கிராம்; காண்டா மிருகக் கொம்பு 10 கிராம்

மேற்கூறப்பட்டவைகளை முறைப்படி தூயவாக்கி அரைத்து உட்கொள்ள உடல் எரிச்சல் குணமாகும்.

சுக்கான் கல் 10 கிராம்; மான் கொம்பு 10 கிராம்; காண்டா மிருகக் கொம்பு 10 கிராம்.

இவை மூன்றையும் முறைப்படி தூயவாக்கி, உத்தாமணிச் சாறுவிட்டு நன்கு நெகிழ அரைத்து, வில்லைதட்டி உலர்த்தி, ஓட்டி லிட்டு மேலகல் மூடிச் சீலை செய்து 10 எருவில் புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இதில் குமரிச்சாறு விட்டு மறுபடியும் அரைத்து வில்லை தட்டி உலர்த்திப் புடமிட்டெடுக்க அது உயர்ந்த பற்பமாகும்.

அளவு : 1 முதல் 3 நெல் எடை (காலை, மாலை. இரு வேளை)

துணை மருந்து: வெண்ணெய், நெய், பால், தேன், சர்க்கரை, இவற்றுள் ஏதாவதொன்றில் குழைத்து உட்கொள்ள அம்மையின் போது ஏற்படக் கூடிய சரீரக் காந்தல் குணமாகும்.

## கிராந்தலுக்கு மருந்து வேறு

போமென்ற மருந்தது சொல்லக் கேளாய்
புகழான பிராயிலையைப் பறித்து வந்து
ஓமென்ற புதுச்சட்டி தன்னிற் போட்டே
உற்றநீ ராகாரத்திற் பிசரி வாங்கிப்
பாமென்ற கால்படிதா னுள்ளே கொண்டால்
பண்பாகக் கிராந்தியின் நீரே கொள்ளும்
தேமென்று மிறங்கியது இலகுவே யாகுந்
திறமான நோயதுவுந் தீருந் தானே, (38)

காந்தல் குணமாவதற்குரிய மருந்தொன்று சொல்கிறேன் கேட்பாயாக! புகழுடைய பிராயிலையைப் பறித்து வந்து புதுச் சட்டியிலிட்டு அதனுடன் நீராகாரம் சேர்த்துப் பிசைந்து வடி கட்டி உட்கொள்ள அம்மைக் கொப்புளங்கள் வாட்டமடைந்து, காந்தல் குணமாகும்.

## பேதி கண்டவர்களுக்கு மருந்து

தானென்ற வைசூரி சரியு முன்னே
தருகாமல் பேதியது கண்ட தானல்
ஊனென்று இச்சியுள இலைப றித்து
வுரமாகச் சட்டியிலே உராய்ச்சிக் கொண்டு
நானென்ற நீராகாரம் விட்டு வாங்கி
நனவாக மூன்றுதினங் கொண்டால் நீரும்
கானென்ற சுக்கும்வேப் பீர்க்குங் கூட்டிக்
கனமான விலாமிச்சம் வேருங் கூட்டே. (39)

அம்மை நோய் ஏற்பட்டவர்களுக்குப் பேதி கண்டால் இச்சிமரத்தின் இலையைக் கொண்டு வந்து சட்டியில் உராய்ந்து கசக்கி அதனுடன் நீராகாரம் சேர்த்துக் கலக்கி வடிகட்டி மூன்று நாள் உட்கொண்டு வந்தால், பேதி குணமாகும். மேலும், சுக்கு, வேப்ப ஈர்க்கு, விளாமிச்சை வேர் மூன்றையும் கூட்டிக்கொள்ள வேண்டும்.

கூட்டியே முத்தவுட மிளவ றுப்பாய்க்
குணமாக வறுத்ததனைக் கியாழஞ் செய்து
நாட்டியே கொடுக்கவதி சாரந் தீரும்;
நலமாக இன்னமொரு கியாழஞ் சொல்வேன்:
ஆட்டியதோர் பொன்முசுட்டைக் கிராம்பு தானும்
அழகான வேப்பீர்க்குங் கியாழங் கொள்ளத்
தாட்டிகமாய்ப் பேதியது தீருங் கண்டாய்
சாதகமா யிம்மருந்தைச் சார்ந்து கொள்ளே. (40)

மேற்கூறியபடி கூட்டியதனை, இளவறுப்பாய் வறுத்துக் கியாழம் செய்துகொடுத்தால், அதிசாரபேதி குணமாகும். மேலும் பொன்முசுட்டை, கிராம்பு, வேப்பீர்க்கு மூன்றையும் சமனெடை எடுத்துக் கியாழமிட்டுக் கொடுக்க, அம்மை நோயால் ஏற்படும் எல்லா வகையான பேதி நோய்களும் குணமாகும்.

## பலசரக்குக் குடிநீர்

கொள்ளவே பலசரக்குக் குடிநீர் தானுங்
 குணமாகச் சொல்லுகிறேங் கேளு நன்றாய்;
விள்ளவே ஆல்அத்தி வித்து தானும்
 விதமான அரசுடனே ஒதியுங் கூட்டி
மெள்ளவே இச்சிதுத்தி காசான் கூட
 மேலான சதிருடனே சுக்கு மொன்றாய்
அள்ளவே குடிநீராய்ச் செய்து கொண்டால்
 அதிசார முள்ளதெலா மகன்று போமே. (41)

ஆல வித்து, அத்தி வித்து, அரச வித்து, ஒதிய வித்து, இச்சி வித்து, துத்தி வித்து, காசான் வித்து, சதிர் வித்து (ஆவாரை வித்து) கற்கண்டு ஆகியவற்றை ஒரேயளவாகச் சேர்த்துக் குடிநீரிட்டு உட்கொள்ள அம்மை நோயால் ஏற்பட்ட எல்லா வகையான பேதியும் குணமாகும்.

## இரத்தக் கடுப்புக்கு மருந்து

போமென்றவை சூரிரத்தக் கடுப்புக் கண்டால்
 புகழான நாவலது முட்டை பட்டை,
ஆமென்ற துவைத்தாவின் பாலில் சேர்த்தே
 அழகாகப் பிழிந்துடனே வடியே கட்டிக்
காமென்ற காற்படிதா னுள்ளே கொள்ளக்
 கடுப்பெடுத்த ரத்தமது கலங்கிப் போகும்;
தேமென்ற விம்மருந்து கொண்ட போதே
 திறமாகத் தீருமது தெரிந்து செய்யே, (42)

அம்மை நோய் ஏற்பட்டவர்களுக்கு இரத்தக் கடுப்பு ஏற்பட்டால், (1) நாவற்கொட்டை (2) நாவற்பட்டை இரண்டும் வகைக்கு 5 விராகனெடை எடுத்தரைத்துப் பசுவின் பாலில் கலந்து காய்ச்சி வடிகட்டிக் காற்படியளவு உட்கொள்ளக் கடுப்புடன் கூடிய இரத்தக்கழிச்சல் குணமாகும்.

செய்யவே வெண்ணத்தி வேரின் பட்டை
திறமான ஈருள்ளி சீரகமுஞ் சேர்த்துப்
பையவே வெள்ளாட்டின் பாலில் தானே
பண்பாக அரைத்தருந்தக் கடுப்புந் தீரும்!
மையவே ஈருள்ளி ஆவி னெய்யில்
விளங்கவே வேகவைத்துக் கொள்ளப் போகும்
கையாரக் கண்டதிந்த மருந்தைக் கண்டால்
கடல்கடந்து போகுமடா கடுப்புத் தானே. (43)

(1) வெள்ளத்தி, வேலம்பட்டை, வெங்காயம், சீரகம் இவை நான்கையும் சமனெடை எடுத்து, நன்கு நெகிழ அரைத்து, வெள்ளாட்டின் பாலில் கலந்து உட்கொள்ளக் கடுப்புக் கழிச்சல் குணமாகும்.

(2) வெங்காயத்தைப் பசு நெய்யில் வதக்கி உட்கொண்டால், கடுப்புக் கழிச்சல் கடல் கடந்து போகும்.

## அதிசாரத்திற்கு மருந்து

தானென்றவைசூரியதி சாரங் கண்டால்
தரமாகச் சீந்தில்முத்தக் காசு சுக்குத்
தேனென்ற மேல்தோலைத் தள்ளிப் போட்டுத்
திடமாக வேவறுத்துக் கியாழங் கொள்ள
மானென்ற வதிசாரம் நிற்கும் பாரு
மகிமையாய் மருந்துதான் மூன்று நேரம்
கானென்ற கியாழமது கொண்டால் தானே
கலங்கியதி சாரமெல்லாங் கடலிற் போமே. (44)

அம்மை நோயில் அதிசாரம் (பேதி) ஏற்பட்டால், சீந்தில் தண்டு, கோரைக்கிழங்கு, சுக்கு ஆகியவற்றை முறைப்படி தூய வாக்கி நன்கு வறுத்துக் குடிநீரிட்டு எட்டொன்ருக வற்ற வைத்து நாளும் மூன்று நேரம் உட்கொண்டு வந்தால், அதிசார நோய் குணமாகும்.

போமென்ற சிங்கிபற்பம் விராக னென்று
புகழான மான்கொம்புத் தண்ணீர் வாங்கிக்
கானென்ற தண்ணீரிற் கலக்கிக் கொள்ளக்
கழிச்சலதி சாரமுடன் கடுப்பும் போகும்;
வேனென்ற ஈருள்ளிச் சாறுங் கூட்டி
விளங்கவே ஆவினெய்யில் விரவிக் கொள்ளத்
தானென்ற கடுப்புடனே சீத ரத்தம்
தருகாமல் தீருமது தன்மை தானே. (45)

மான்கொம்புப் பற்பம் ஒரு விராகன் எடுத்து மான் கொம்புத் தண்ணீரில் கலக்கி உட்கொள்ளக் கழிச்சல், கடுப்பு குணமாகும். மேலும் வெங்காயச் சாறும் கூட்டிப் பசு நெய் கொண்டு கலந்து உட்கொண்டு வந்தால் கடுப்போடு கூடிய சீத இரத்தம் குணமாகும்.

## தொண்டைக்கம்மலுக்கு மருந்து

தண்மையென்ற வைசூரி மென்னி கட்டித்
தருகாமல் சேத்துமந்தான் நெஞ்சில் நின்றால்
வண்மையென்ற கர்ப்பூர வள்ளிச் சாற்றில்
வளமானகோ ரோசனையுங் கூட்டி யுண்ண
வெண்மையென்ற மொழியாரே கம்மல் தீரும்
மெல்லியரே நீரிதனை விரும்பிச் செய்தால்
கண்மையென்ற மாதளம்பூக் கியாழஞ் செய்து
கருந்தேனும் பழச்சாறும் மூன்று மொன்றே. (46)

அம்மை நோயின்போது தொண்டை கட்டிக் கபம் நெஞ்சில் நின்றால், கற்பூரவள்ளிச் சாற்றில் கோரோசனை சேர்த்து உட்கொண்டால் தொண்டைக்கம்மல் குணமாகும். மாதுளம் பூவைக் குடிநீரிட்டு அதனுடன் தேன் பழச்சாறு மூன்றும் சமவளவாக ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றாக மத்தித்துக் கொப்புளித்தால்
ஓகோகோ மென்னிக்கட் டுடனே தீரும்;
நன்றாகக் கம்மலது வாங்கிப் போகும்;
நலமாக வுட்கொள்ள லாகா தப்பா!
செண்டுமலர்க் கொங்கையரே யிந்தப் போக்குச்
செகத்திலிது வுச்சிதமாஞ் செய்து பாரு;
மன்றாடி தேவியர்க்கு ஈசன் றானும்
மகிமையுட னுரைத்ததிது வாசி யாமே. (47)

வாய் கொப்புளித்து வந்தால் தொண்டைக்கட்டு உடனடியாக நிவர்த்தியாகும். ஆனால், உட்கொள்ளக்கூடாது. இம்முறையே சாலச் சிறந்ததாகும். இம்முறை பார்வதிக்குப் பரமசிவன் மொழிந்ததாகும்.

## சுரத்திற்குக் கியாழம்

ஆமென்ற சூரியது சுரமே கண்டால்
அழகான வெலுமிச்சம் வேரின் பட்டை
சேமென்ற வேலமுடன் சிந்திலா மிச்சந்
திறமான பற்படகம் சாந்தமுதம்
பானென்ற வகையைந்தும் விராகன் வீதம்
பண்பாகக் கியாழஞ்செய்து மூன்று நேரம்
வாமென்று குடித்திடவே சுரமுந் தீரும்
வளமான விம்மருந்தை வளமாச் செய்யே. (48)

அம்மை நோய் ஏற்பட்டபோது சுரம் ஏற்பட்டால் எலுமிச்சம் வேரின் பட்டை, வேலம்பட்டை, விலாமிச்சம் வேர், பற்படகம், சந்தனம் ஆகிய ஐந்தும் வகைக்கு ஒரு விராகனெடை எடுத்துத் தூள் செய்து குடி நீரிட்டு உட்கொள்ளச் சுர நோய் குணமாகும்.

செய்யடாவை சூரியதில் சுரமே கண்டால்
திறமாகச் சொல்லுகிறேன் காமப் பூதான்
பையவே விராகனுமோ வைந்தெடுத்துப்
பாங்காகக் கியாழஞ்செய் தீரு மெய்தான்
மெய்யடா ஆவின்கோ ரோசனைகா லாக
விளங்கவே யதில்கரைத்து வுள்ளே கொள்ளு
நையடா சுரங்களெல்லாந் தீரும் பாரு
நலமாகக் கிராந்தியது வெளியிற் காணும். (49)

அம்மையின் போது சுரம் ஏற்பட்டால் மதனகாமப்பூ ஐந்து விராகன் எடுத்து, அரைப்படி தண்ணீர் விட்டுக்குடிநீரிட்டு அதில் கால் விராகன் கோரோசனையைக் கரைத்து உட்கொள்ளச் சுர நோய் குணமாகும்.

## மலக்கட்டிற்கு எண்ணெய்

காணுமடா வைசூரி மலமே சிக்கல்
கனமான தேகமும் புசமே காணும்
தோணுமடா கியாழங்கள் கண்ட போது
தொல்லுலகில் மருந்தொன்று சொல்லக் கேளு!
ஆணுமடா ஈருள்ளி விராக னைந்து
அழகான கற்கண்டு விராக னைந்து
பூணுமடா ஏரணடத் தெண்ணெய் தானும்
புகழாகப் படிகாலி லரைத்துக் கொள்ளே. (50)

அம்மை நோயில் மலச்சிக்கல் ஏற்பட்டால் உடம்பு சிறிது உப்புசங் காணும். அதுபோது வெங்காயம் ஐந்து விராகன், கற்கண்டு ஐந்து விராகன், விளக்கெண்ணெய் காற்படி விட்டு வெயிலில வைத்து நீர் வற்றியபின் காலை மாலை இருவேளை ஒரு தேக்கரண்டி அளவு உட்கொள்ள மலக்கட்டு நீங்கும்.

கொள்ளவே மலசலங்கள் கட்டு விட்டுக்
குறிப்பாக வுப்புசமும் குணமாய்ப் போகும்;
கள்ளமிலாத் தேகமது வுறுதி யாகுங்
கனமான மலசலங்க ளிறங்கு மப்பா!
மெள்ளவே யிம்மருந்தை விரும்பிச் செய்து
மேலான பராபரத்தைத் தொழுது போற்றி
அள்ளவே யுமையாள்தன் பாதம் போற்றி
அழகாக விம்மருத்தை யுமசெய்வாயே, (51)

3 1 DEC 1981

மேற்கூறிய மருந்தை உட்கொண்டால் மலசலமும், கட்டு விட்டாகி உடலுப்புசமும் குறைந்து குணமாகும். மற்றும், இம் மருந்தை உட்கொள்ளுதல் உடலுக்கு உறுதியைத் தரும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் திருப்பாதத்தை வணங்கித் தொழுது, உடனுறை இறைவியின் திருப்பாதத்தையும் வணங்கி அமுதாக அளவோடு இம்மருந்தை விரும்பிச் செய்துட் கொண்டு நலமெய்துவாயாக!

அருளான கலைக்கொம்பை யூறப் போட்டே
அழகாகக் கழுவியதை யுலர வைத்துத்
திரளான அரத்தாலே ராவி யேதான்
தேர்ந்தபொடி பலமிரண்டும் எடுத்துக்கொண்டே
அருளான வெந்நீரைக் காய்ச்சி நன்றாய்
அகமகிழத் தாழியிலே யூற்றிக் கொண்டு
பொருளான மான்கொம்பின் பொடியைத் தானே
புகழாகத் தண்ணீரி லூறப் போடே. (52)

மான் கொம்பை இரண்டு நாள் தண்ணீரில் ஊற வைத்து அதை எடுத்து நன்கு கழுவி வெயிலில் உலர்த்தி எடுத்து அரத் தால் ராவிப் பொடியாக்கி அப்பொடியில் 2 பலம் எடுத்துக் கொண்டதை நன்றாய்க் காய்ச்சின வெந்நீரைச் சிறுபானை யெடுத்து ஊறப் போடவேண்டும்.

போட்டதண்ணீர் தனையிறுத்துத் தாகத் துக்குப்
புகழாகக் கொடுத்துவரச் சொல்லக் கேளு;
ஆட்ட மிட்ட வைசூரி லகுவாய்க் கண்டால்
அழகாக மூன்றும்நாள் மறுதண் ணீர்செய்
தேட்டமுடன் நோய்தீரும் பருவ மட்டுந்
திறமாக இந்தமுறை செய்து தீரு;
வாட்டமிலா நோய்தீருந் தப்பா தப்பா!
வாகாக இம்முறையை வணங்கிச் செய்யே. (53)

மேற்கூறப்பட்ட தண்ணீரை நோயாளிக்குத் தாகம் எடுக்கும்போது கொடுத்துவர, ஆட்டமிட்ட வைசூரி குணமாகும். குணமாகிய அம்மை நோயாளியை மூன்றும் நாள் குளிக்கச் செய்து, மேற்கூறப்பட்ட நீரையே தாகம் ஏற்படும் போதெல் லாம் கொடுத்துவந்தால் குணமாகாத அம்மை நோய்களனைத்தும் குணமாகும். இம்முறையை உடல் வணங்கிச் செய்வாயாக!

## கண்ணுக்கு ஒற்றடம்

செய்யப்பா நேத்திரக்கொற்றடமே கேளு
திறமான சீரகம்பொட் டணமே கட்டி
ஐயப்பா முலைப்பாலில் தோய்த்துக் கொண்டே
அழகான விழிதனிலொற்றிடநன் முகும்
நையப்பா நேத்திரத்திற்கு இன்னுங் கேளுஃ
நலமான பொட்டணமாய்க் கட்டிக கொண்டு
வையப்பா நீராகா ரத்தில் தோய்த்து
வகையாக வொற்றவிழி விதனந் தீரும். (54)

அம்மை நோயினால் ஏற்படுகின்ற கண்ணோய்க்குச் சீரகத்தை முறைப்படி தூய்மை செய்து, ஒரு வெள்ளைததுணியில் பொட்டணமாகக் கட்டி, தாய்ப்பாலில் துணி முழுவதும் நனையுமாறு வைத்தெடுத்துக் கண்ணில் ஒற்றடம் கொடுக்கக் குணமாகும்.
மேற்படி பொட்டணத்தை நீராகாரத்தில் நன்றாய் நனைத்துக் கண்ணில் ஒற்றடம் கொடுக்க வலி தீரும்.

## விழியில் குரு வாராமலிருக்க மருந்து

தீருமடா விழியதனில் குருவா ராமல்
செப்புகிறேன் மருந்தொன்று; திரமாய்க் கேளு:
ஆருமடா வைசூரி சுரங்காய் போதில்
அழகான உள்ளிப்பூ வொன்று வாங்கே
பாருமடா மறுமனுடன் வாயா லென்று
பதறும விருகண்ணி லூற்றத் தானே
காருமடா கண்தனிலே குருவா ராது
கருத்தாக இம்முறையைக் கருத்திற் கொள்ளே. (55)

அம்மை நோயினால் கண்களில் வேர்க்குரு போன்ற பருக்கள் வராமலிருக்க மருந்தொன்று சொல்கிறேன் கேட்பீர்களாக! அம்மை நோயுற்றிருக்கும் போது சுரம் காயும்; அப்போது வெங்காயப்பூ ஒன்று கொண்டு வந்து அதனுடைய சாறெடுத்துக் கண்களிலிட்டு வந்தால் வேர்க்குரு போன்ற பரு வாராது. இதைக் கருத்திற் கொள்வாயாக!

கொள்ளென்ற வைசூரி கண்ட பேர்க்குக்
கொடியதொரு வாயாலே ரத்தங் கக்கும்;
அள்ளென்ற நீருடனே கூட வொன்றாய்
அழலாக ரத்தமது காணுங் கண்டாய்;
விள்ளென்றீ இம்முறைக்கு மருந்து தானே
விவரமாய்ச் சொல்லுகிறேன் கேளு கேளு:
தள்ளென்ற பூநாக மைந்தெ டுத்துத்
தவிராமற் கழுவிநன்று யெடுத்துக் கொண்டே (56)

அம்மை நோய் கண்ட பேருக்கு வாயிலும், நீர்த்தாரை யிலும் இரத்தம் கண்டால், பூ நாகம் 5 கொண்டு வந்து கழுவி எடுத்துக்கொண்டு ; (இப்பாட்டுக்குளகம்; அடுத்த பாட்டைத் தொடரும்).

கொண்டதொரு நன்னாரி வேருங் கூட்டிக்
குறிப்பாக நரம்புதள்ளி மேல்தோல் போக்கி
அண்டதொரு விராகனெடை இரண்டெடுத்தே
அழகான முன்மருந்தோ டொக்கச் சேர்த்து
முண்டதொரு மான்கொம்புச் சாந்து சேர்த்து
முறைமையாய்க் கொம்பூறுந் தண்ணீர் தன்னில்
விண்டதொரு மருந்தெல்லாஞ் சேர்த்துத் தானே
விவரமாய்க் கொண்டிடவே யுதிரம் போமே. (57)

மேற்கூறப்பட்ட பூநாகத்துடன் 2 விராகன் எடை நன்னாரி வேர் சேர்த்து (நன்னாரியுடைய நரம்பும், மேல்தோலும் போக்கிச் சேர்க்க.) அதனுடன் 2 விராகன் எடை மான்கொம்பை அரைத்த சாந்தையும் சேர்த்து நன்கரைத்து மான்கொம்புப் பொடி ஊறிய தண்ணீரையே துணை மருந்தாகப் பயன்படுத்த, வாயிலிருந்தும் நீர்த்தாரையிலிருந்தும் வழியும் இரத்தம் குணமாகும்.

போமென்ற உதிரமது போகும் நன்றாய்ப்
புகழாக மூன்றுதினங் கொண்டா யானல்
காமென்ற சன்னியது கடலிற் போகுங்
கைக்கடங்காத் தோடமது கலங்கிப் போகும்
தாவென்ற கிராந்தியது தீருங் கண்டாய்
தளதளென் மேலெழும்பி இறங்கும் பாராய்
ஆமென்ற இம்மருந்தை யார்க்குச் சொன்னேம்
அழகான சித்தருக்குச் சொன்னேங் கண்டாய். (58)

மேற்கூறியபடி மருந்தைக் காலை, மாலை இருவேளை மூன்று நாள்கள் உட்கொண்டால், இரத்தம் போவதும், அம்மை நோயால் ஏற்படக்கூடிய கேடுகளும் குணமாவதுடன் உடம்பில் தளதளவென எழும்பும் கொப்புளங்களும் இறக்கம் கொடுத்து முழுக்குணமேற்படும்.

## சூலைக்கு மருந்து

கண்டாயோ வைசூரி சூலைக் கட்டில்
கனமான வமிழ்தமொன்று கழலக் கேளு:
தெண்டிரையில் பழங்கூரை வைக்கோல் சேர்த்துத்
திறமான வேம்பினிலை கூடக் கூட்டி
மண்டியிடித் தொத்திட்டு வைத்துக் கட்ட
மகிழ்வான சூலையது வாங்கிப் போகும்;
பண்டிதனே! இம்முறையை வைத்துக் கட்டி
பரிவாக மறுதினத்தில் தீருந் தானே. (59)

வைசூரி நோயிலுண்டாகும் சூலையைப் போக்க நன்முறை மருந்தைக் கேட்பாயாக ; பழங்கூரை வைக்கோலுடன் வேம் பினிலையைக் கூட்டி நன்ருக இடித்து வைத்துக் கட்டினுல், சூலை நோய் மறுநாளிராமல் தீர்ந்துவிடும்.

தானென்ற வேதுவொன்று சொல்லக் கேளு:
 தயவாகச் சொல்லுகிறேன் மனித ருக்காய்;
வானென்ற வட்டமிட்ட துத்தி தானும்
 மகிழ்வாகச் சமூலமது வேக வைத்து
நானென்ற ஒற்றிட்டு வேது வார்க்க
 நாளுமொரு பதின்மூன்றில் சூலை வாங்கும்
மானென்ற விழியணங்கே! இந்தப் போக்கை
 மகிமையில்லாப் பேர்களுக்கு வுரைசெய் யாதே. (60)

மேற்கூறியதன்றிச் சூலைக்கு மற்றுமொரு மருந்து சொல்லு கின்றேன் ; கேட்டறிந்துகொள்க: துத்தியின் சமூலத்தை நன்ருக வேகவைத்து ஒற்றடம் கொடுத்தால், பதின்மூன்ரும் நாள் சூலை நோய் வாங்கிவிடும், மான் போன்ற விழியையுடைய பெண்ணின் நல்லாய் ! அறிவில்லாத பெருமையற்றவர்கட்கு இம் மருந்தை உரைக்காதே.

## ஆருத புண்ணுக்கு மருந்து

செய்யாத வைசூரி யாரு விட்டால்
 திறமாக மருந்தொன்று செப்பக் கேளு!
கையார முத்திதுதான் முற்றுத் தேங்காய்
 கனமாகத் திருகியந்தப் பூவை வாங்கி
ஐயான் புளியவிதை மேற்ருேல் தன்னை
 அழகாகப் பொடிசெய்து பூவிற் சேர்த்து
மெய்யாகப் பிசைந்துபிழி; தைலம் வீழும்
 விவரமாய்த் தைலமதைப் புண்ணிற் பூசே, (61)

அம்மையினுல் ஏற்பட்ட புண்கள் ஆருவிடில் முற்றிய தேங்காய் ஒன்று உடைத்து அதன் பூவைத்திருகி எடுத்து, அதனு டன் புளியங்கொட்டையின் மேல்தோலைப் பொடிசெய்து போட்டு நன்கு பிசைந்து, சிறிது நேரம் வெயிலில் வைத்தெடுத்துப் பிழிய அதிலிருந்து தைலம் வரும். அத்தைலத்தைப் புண்களின்மேல் பூசுக.

பூசவே புண்ணுறு மிதனை நன்ருய்ப்
 புகழாகச் செய்துவர வீக்கம் போகும்;
நேசமாய் வைசூரி சரிந்தே மூரம்நாள்
 நினைவாக வாரோக்ய முழுக்குச் செய்ய
வாசமாய்ச் சொல்லுகிறேன் கேளு நன்ருய்:
 வகையான பருத்திப்பிஞ் சத்திப் பிஞ்சும்
பாசமாய்ச் சாதிக்காய்சீ ரகமுங் கூட்டிப்
 பரிவாக மோரிலரைத் துள்ளே கொள்ளே. (62)

புண்கள் நன்ருக ஆறும், மேலும், இத்தைலத்தையே தடவி வந்தால், இரணத்திஞல் ஏற்பட்ட வீக்கமும் குணமாகும், முழுதும் குணமாகிய ஏழாவது நாளில் தலை முழுகிவிட்டுப் பருத்திப் பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், சீரகம் இவை நான்கும் வகைக்கு 2½ விராகன் எடை எடுத்து நன்கு நெகிழ அரைத்து மோரில் கலக்கி உட்கொள்ளல் சாலச் சிறந்ததாகும்.

கொள்ளடா வேப்பிலையு மஞ்சள் தானுங்
குணமான மூதண்டங் கூடச் சேர்த்து
விள்ளடா மோர்விட்டே யரைத்து நன்ருய்
மேலாகச் சிரசிற்குத் தேய்த்து தானே
கிள்ளடா உடம்பெல்லாம் நலங்கே யிட்டுக்
கிருபையாய்க் குளிர்ந்தநீர் தன்னை வார்ப்பாய்;
தள்ளடா இப்படியே மூன்று நாள்தான்
தயவாக வொன்றைவிட் டொருநாள் மூழ்கே, (63)

வேப்பிலை, மஞ்சள், மூதண்டம் இம்மூன்றையும் நன்கு நெகிழ அரைத்துத் தலையில் தேய்த்து, சரீரம் பூராவும் நன்கு தடவிக் குளிர்ந்த நீரில் குளிக்கவேண்டும், இவ்வாறு மூன்று தினங்கள் ஒன்று விட்டொருநாள் குளிக்க வேண்டும்.

மூழ்கியபின் வேப்பிலையும் மஞ்சள் தானும்
முசியாமல் தானரைத்துப் புண்ணிற் பூச
ஆழ்கியபின் தயிர்தேய்த்துத் தண்ணீர் வாரு
அடைவாக வொன்றைவிட் டொருநாள் மூழ்கத்
தேங்கியதன் தேகமதன் இரணங்கள் போகுஞ்
சுங்கசிவா யின்னமொன்று திறமாக் கேளு :
பாங்கியதோர் விளக்கெண்ணெய் தேய்த்து நன்ருய்ப்
பரிவாக வுசிலையரைப் பிட்டு மூழ்கே. (64)

மேற்கூறியவாறு மூழ்கிய பிறகு வேப்பிலையும் மஞ்சளும் சேர்த்து அரைத்துப் புண்ணில்பூசி, சிறிது நேரம் கழித்துத் தயிர் தேய்த்துத் தண்ணீர் ஊற்றித் தொடர்ச்சியாக ஒன்று விட்டொரு நாள் மூழ்கிவர, உடலில் ஏற்பட்டுள்ள புண்கள் முழுதும் குணமாகும். மேலும், ஆமணக்கு நெய் தேய்த்து, உசிலை அரைப்பிட்டுக் குளிர்ந்த நீரில் மூழ்கவும்.

மூழ்கியபின் மோருஞ்சோ றும்மே கொள்ளு;
முசியாம லீருள்ளி கூட்டி யுண்ணு;
ஆழ்கியபின் தலைமுழுக்குச் செய்நாள் தொட்டே
அடராக விப்படியே அசனங் கொள்ளு;
தாழ்கியபின் தேகமது பலக்கும் நன்ருய்;
தயவாக அசனமது நன்ருய்க் கொள்ளு;
மாழ்கியபின் தேகமது பலமே யாகும்;
மன்மதன்போல் தேகமெல்லாங் குளிர்ச்சி யாமே. (65)

மேற்கூறியவாறு தலை மூழ்கியபின் மோர்ச்சோறு உட்கொள்ள வேண்டும். அதனுடன் வெங்காயம் சேர்த்து உட்கொள்ள வேண்டும். மறுநாளிலிருந்து நெய் சேர்த்துத் தலை முழுகி, உணவு உட்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வர உடம்பிலுள்ள புண்கள் ஆறிடல் உறுதியாகும். பின்னர், உடலும் மன்மதனைப் போன்று அழகுடன் விளங்கித் தோன்றும்.

## வைசூரி கண்ட ஆறு மாதத்துக்குள் நோய் வந்தால்

ஆமென்ற வைசூரி வந்த பேர்க்கே
அழகாகச் சொல்லுகிறேன்; விவரங் கேளு;
தாமென்ற ஆறுதிங்கள் செல்லு மட்டுஞ்
சரீரத்தில் பலனுமோ நன்று யில்லை
வாமென்ற இதற்குள்ளே ரோகம் வந்தால்
மகத்தான மருந்துதான் லகுவாய்ச் செய்வாய்;
தேமென்ற கடுங்கார லவிழ்தஞ் செய்தால்
தேகத்தில் பொல்லாப்புஞ் சேருங் காணே. (66)

அம்மை நோயுற்றவர்கள் பலவீனமாக இருப்பார்கள், ஆகையால், ஆறு மாதம் வரையில் எந்த விதக் கடுமையான வேலையும் செய்ய முடியாது. மேலும், காரமான உணவுகளையும் உட்கொள்ளக் கூடாது, கடுமையான மருந்துகளையும் கொடுத்தல் கூடாது; அவ்வாறன்றி இருப்பின் உடலம் தீங்குக்குள்ளாகி நோய்களை வருவிக்கும்,

## மறுமுள்ளு விவரம்

காணப்பா வைசூரி தண்ணீர் விட்டால்
கனமான மறுமுள்ளு வருவ தேது?
தோணப்பா வைசூரி நாளைத் தொட்டுத்
தொடங்கியநா ளொன்பதுக்குங் குருவே காணும்;
ஆணப்பா குருக்கண்ட நவதி னத்தில்
அடைவாக நீர்கொண்டே இறங்குங் கண்டாய்;
நாணப்பா இளங்குருவில் தண்ணீர் விட்டால்
நலமான மறுமுள்ளுக் காணுந் தானே. (67)

அம்மை நோய் கண்டு முழுக்குணம் அடைந்தவர்களுக்கு மறுமுள் ஏற்படுவதில்லை. அம்மை நோய் கண்ட ஒன்பது நாளில் இறக்கங் கொடுக்கும். அவ்வாறு இறக்கம் கொடாமல் சிறு வேர்க்குரு போன்று பருக்கள் இருப்பின், அவற்றின்மேல் தண்ணீர் விட்டால், அத்தண்ணீரானது உடலில் இறங்கி மீண்டும் அம்மை நோயைத் தோற்றுவிக்கும், இதற்கு மறுமுள் தோன்றல் என்பது பெயர்.

தானென்ற மறுமுள்ளு காணும் போது
    தணலாகச் சரீரத்திற் சுரமே காணும்;
மானென்ற வுடலதிலே மறுமுள் ளுந்தான்
    வளமாக வேபுடைத்து ரணமுங் காணும்;
பானென்ற பலவகையாய்ப் புண்ணே காணும்
    பரிவான சுரமதுவுந் தீரத் தானே
கானென்ற மருந்ததுவுஞ் சொல்லக் கேளு
    கடவுள்பதம் போற்றியே கேளு கேளு. (68)

மறுபடியும் அம்மை நோய் கண்டால், உடம்பில் சுரம் நெருப்பாகக் கொதிக்கும். உடலிலுள்ள அம்மையானது பெரிய தாகிப் புண்கள் காணும். அதே போன்று பல வகையான புண்கள் தீர்வதற்கு மருந்து ஒன்று சொல்கிறேன். கடவுளை வணங்கிக் கேட்பாயாக.

கேளப்பா சுரமுந் தீரக் கிருபையாய்க் கியாழம் சொல்வேன்
வாளப்பா சாதிக் காயும் வளமான நறுக்கு மூலம்
தேளப்பா கிராம்பு கூடச் சீரகங் கூட்டிக் கொண்டு
நாளப்பா கியாழம் செய்து நலம்பெற இறுத்து வாங்கே. (69)

மேற்கூறப்பெற்ற சுரந்தீரக் கியாழம் ஒன்று சொல்வேன் கேள். சாதிக்காய், சுண்டந்திப்பிலி, கிராம்பு, சீரகம் இவற்றை வகைக்கு 2½ விராகன் எடை எடுத்துத் தூய்மைப்படுத்திக் கியாழமிட்டு வடித்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

வாங்கிய கியாழந் தன்னில் வளர்நிம்பச் சாறுங் கூட்டி
ஓங்கியீ ருள்ளிச் சாறும் உகந்துடன் கூடக் கூட்டிப்
பாங்குள்ள சட்டி காய்ந்து பரிவுடன் முரித்து வாங்கித்
தீங்கில்லாத் தேனுஞ் சேர்த்துத் திறமுட னுள்ளுக் கீயே. (70)

முன் கூறியபடி வடித்தெடுத்துக்கொண்ட குடிநீருடன் எலுமிச்சம்பழச்சாறு கூட்டுவதுடன் வெங்காயச் சாற்றையும் கலந்து, மண் சட்டியில் காய்ச்சி முரித்தெடுத்துக்கொண்டதன் பின் அதனுடன் தேன் சேர்த்து உள்ளுக்குச் சாப்பிட்டு வரவும்.

## புண்ணுக்குப் பூச்சு மருந்து

ஈய்ந்திடச் சுரமுந் தீரு மியல்புடன் இரணமு மாறும்
வாய்ந்திட மருந்து தானும் வகையுட னின்னங் கேளாய்;
பாய்ந்திடச் சூடன் ரூனும் பகர்வட்டத் துத்திச் சாற்றில்
தேய்ந்திட மத்தித் தேதான் திருவிளக் கெண்ணெய் சேர்த்துச்
சாய்ந்திட ரணத்திற் பூசச் சகலபுண் ணுறுந் தானே. (71)

சுரம் தீர்ந்து இரணம் ஆறும். மேலும், இரணங்களுக்குச் சூடத்தைத் துத்திச்சாற்றில் குழைத்து, விளக்கெண்ணெய் சேர்த்து, இரணத்தில் பூச, எல்லாப் புண்களும் ஆறும்.

*ஆறியவை சூரிவந்து வடுத்திடு மன்றே நீதான்*
*கூறிய குதிரை லத்தி கொணர்ந்ததில் பதினுன்காத்*
*தேறியே எடுத்துக்கொண்டு திறமதாய்ச் சட்டி தன்னில்*
*பாதியே தண்ணீர் விட்டுப் பாகமாய்க் கரைத்து வையே, (72)*

முன் மாறிய வைசூரி மீண்டும் உடலில் தோன்றினுல், குதிரைச்சாணியில் (அப்போதிட்டது) பதினுன்கு கொணர்ந்து அதை மண்சட்டியில் தண்ணீர் பாதிவிட்டு நன்ருகக் கரைத்துக் கொள்ள வேண்டும்.

*வைத்ததோர் தண்ணீர் தன்னை வகைபடச் சாமஞ் சென்ருல்*
*கைத்ததோர் தெளிவி றுத்துக் கனம்பெற வுள்ளே கொள்ளு*
*மைத்ததோர் மருந்துக் கெல்லாம் வகைபட இந்நீர்சேர்த்துத்*
*வைத்ததோர் மருந்தைச் செய்தால் பலபலவை சூரி*
*[போமாம். (73)*

கரைத்த கலவையை 4 மணி நேரம் தெளிய வைத்து இறுத்து உட்கொள்ளவும். பல வகைப்பட்ட அம்மை நோய் களுக்கெல்லாம் மேற்கூறிய இந்நீரையே சேர்த்து மருந்து செய்து கொடுத்தால் பற்பலவான நோய்களாக நிறைந்துவரும் வைசூரி நோய் வாராது போகும்.

*ஆமென்ற லத்தி தானு மழகதா யன்றன் றைக்குத்*
*தாமென்ற புதிதாய்ச் சேர்த்துத் தயவாக அருந்து வீரேல்*
*வாமென்வை சூரி வந்து வளர்முழுக்காடு மட்டும்*
*போமென்ற தாகத் துக்குப் பொருந்திய மருந்து கேளே. (74)*

முன் கூறியபடி குதிரைச்சாணத்தின் சாற்றை வைசூரி நோய் தீரு மட்டும் கொடுப்பாயாக. அன்றன்றைக்குப் புதிதாக எடுத்து வடித்துக் கொடுக்க வேண்டும். அடுத்து வைசூரிக் காலத்தில் ஏற்படும் தாகத்தைத் தீர்க்க மருந்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக!

## வைசூரிக்குப் பத்தியம்

சேரும்பத் தியத்தைக் கேளு திறமாகச் சாதஞ் செய்து
ஆருமே யாற வைத்தே அழகுடன் மிளகு நீரும்
காருமே வகையாய்ச் செய்து கனம்பெறக் கொள்ள நன்றாம்
பாரும்வை சூரி தானும் பரிவுட னிறக்க மாமே. (75)

அம்மை நோயுற்றவர்களுக்குச் சாதத்தைக் குழைய வடித்துப் புளி சேர்க்காமல் மிளகுச்சாறு வைத்து உணவு உட்கொள்ளச் செய்தால் விரைவில் இறக்கம் கொடுக்கும்.

பரிவுட னிதந்தப் பாமல் பண்பதாய்ச் செய்து கொண்டு;
நெரியுடன் சரிந்த பின்பு நீர்மோருஞ் சாதங் கொள்ளு;
தரியதி கார மாகச் சாந்தமாம் பழமு மாகச்
சரிபட எலுமிச் சங்காய் சலம்பழம் புளியு மாமே. (76)

மேற்கூறப் பெற்றது போல் உணவு கொடுத்து அம்மை இறக்கம் கொடுத்த பிறகு மோர்ச்சோறு உட்கொள்ளச் செய்ய வேண்டும். காரம் சேர்க்கக்கூடாது. மேலும் எலுமிச்சங்காய், எலுமிச்சம்பழம், பழம் புளியும் சேர்த்துக்கொள்ளலாம். மரப்புளி சேர்க்கக்கூடாது.

குறிப்பு :- சமையலில் புளிக்குப் பதிலாக எலுமிச்சம்பழம் சேர்த்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

## பத்தியத்திற்கு ஆகும் பொருள்கள்

ஆமென்ற நெல்லிக் காயாம் அரும்பனங் கற்கண் டாகும்
கானெனத் தகவேம் பாகும் களங்குளக் கெளிற்றி வற்றல்
தாமென்ற குறவை வற்றல் தளர்பாசிப் பயறு மாகும் ;
வேமென்வெள் ளாட்டின் வற்றல் விவரமாய்க் கூட்டலாமே.

நெல்லிக்காய், பனங் கற்கண்டு, வேம்பு, கெளிற்றி குரவை வற்றல், பாசிப்பயறு, வெள்ளாட்டு வற்றல், ஆகியவையே பத்தியத்திற்கு உகந்தவையாகும்.

கூட்டலாங் காடை யாகுங் குலாவுவெள் ளெலியு மாகும்;
நாட்டினி லுடும்பு மாகும்; நல்லவூர்க் குருவி யாகும்;
வாட்டமாய் வாழைக் கச்சல் வளரத்திப் பிஞ்சு மாகும்;
தேட்டமாஞ் சீனி யான தெளிந்தகற் கண்டு மாமே. (78)

காடை, வெள்ளை எலி, உடும்பு, ஊர்க்குருவி, வாழைக் கூச்சல், அத்திப்பிஞ்சு, சீனைக்கற்கண்டு ஆகிய பொருள்களே பத்தியத்திற்கானவையாகும்.

## பத்தியத்திற்கு ஆகாப் பொருள்கள்

ஆமென்ற இவையெல்லாங் கூட்டி யுண்க;
அழகான மற்றொன்று மாகா தப்பா!
வேமென்ற ஆகாத பொருள்க ளெல்லாம்
விவரமாய்ச் சொல்லுகிறேன் கேளு நன்றாய்:
தாமென்ற தேங்காய்மாங் காயு மாகா;
தகைவாநல் லெண்ணெயிலுப் பெண்ணெ யாகா;
வாமென்சோற் றுவிநெல் லாவி யாகா;
வளமான கொட்டைமுத் தாவி யாகா. (79)

பத்தியத்தின் பொழுது முன் கூறியவற்றைத் தவிர, தேங்காய், மாங்காய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், முத்துக் கொட்டை எண்ணெய் தாளிப்பு, சோற்றுவி, நெல்லாவி இவை யாவும் ஆகா.

ஆகாது கறிகள்தா னவித்த வாடை
அழகான பிண்ணாக்கு மாகா தப்பா!
தோகையர்க ளாசையுடல் வாடை பட்டால்
தொடுகுறியாய்க் குறிசூலை தோன்றும் பாரு!
வேகமாய்க் கடுப்பெடுத்துக் காடு கட்டி
விவரமாய்க் கைகாலை முடக்கும் பாரு!
தாகமாய்க் குணங்கள்கண் டவிழ்தஞ் செய்தால்
தப்பாது நோயதுவுஞ் சாந்த மாமே. (80)

காய்கறிகள் அவித்த வாடை, பிண்ணாக்கு ஆகியவை ஆகா. மேலும், பெண்கள் தொடர்பு கொள்ளக் கூடாது. அப்படி மீறித் தொடர்பு கொண்டால், அம்மை நோயுற்றவர்களுக்கு வலி ஏற்பட்டுக் கைகால்களை முடக்கிச் சூலை நோயை வருவிக்கும்.

மேற்கூறப்பட்ட நோயின் குணங்களை அறிந்து அவற்றிற் கேற்ற மருந்துகளைக் கொடுத்து வந்தால், நோய் குணமாகும்.

ஆமென்ற விழியதனிற் பூவே வந்தால்
அதற்குமொரு மருந்துதா னறையக் கேளு;
ஏமென்ற பனங்குருத்தைக் கருக்கிச் சாற்றை
இதமாக நயனமதிற் பிழியத் தீரும்;
பாமென்ற முருங்கைப்பூ நெருஞ்சிப் பூவும்
பரிவான நந்திவட்டப் பூவுங் கூட்டிச்
சேமென்ற சீரகமுங் கூட்டிக் குத்தித்
திறமாகப் பிழிந்துவிடத் தீருந் தானே. (81)

கண்களில் பூ விழுந்தால் பனங்குருத்தை நெருப்பனலில் வாட்டிச் சாறெடுத்துப் பூ விழுந்த கண்களில் இடக் குணமாகும்.

மேலும், முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நந்தியா வட்டப்பூ, சீரகம் இவை நான்கும் ஓரளவினவாக எடுத்துக்கொண்டு நசுக்கிப் பிழிந்து, பூவிழுந்த கண்களில் இடக் குணமாகும்.

குறிப்பு:— மேற் கூறப்பட்ட மருந்துகளை ஒரே அளவாக எடுத்துக் குழந்தைப் பாலில் 5 நிமிடங்கள் ஊறவைத்து எடுத்துக் கண்களில் இடல் சாலச் சிறந்ததாகும்.

தானென்ற வைசூரிக் குணமுஞ் சொன்னேன்
தகுமான பத்தியவெஞ் சனமுஞ் சொன்னேன்;
வானென்ற மறுமுள்ளின் நிதானஞ் சொன்னேன்;
வளமான குருபற்பந் தெளிவாய்ச் சொன்னேன்;
தேனென்ற திருவாக ரணத்தை நீக்கத்
திறமாக மேற்பூச்சுஞ் சொன்னேன் பாரு;
கானென்ற சித்தருக்கும் உலகத் தோர்க்குங்
கருத்தாகச் சொல்லிவிட்டேன் வைசூரி முற்றே. (82)

தானாக வருகின்ற வைசூரி யென்ற கொடிய அம்மை நோயின் குணத்தையும், அதைப் போக்கப் பத்தியப் பொருள்களையும், அம்மை நோயில் உண்டாகும் மறுமுள்ளைப் போக்கும்விதத்தையும், அதற்கு மருந்தாம் குருபற்பத்தையும், நோயின் போது உடலி லுண்டாகும் புண்களைத்தீர்க்க மேற்பூச்சு மருந்தையும், சித்தர்களுக்கும், உலகத்தோர்க்கும் சொல்லிய வைசூரி நோயைப் பற்றிய நூல் முற்றிற்று.

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!**

3 DEC